



# வாலிபர் உலகம்

மலர் 09
இதழ் 11
பிப்ரவரி 2019
தனிப்பிரதி ₹10
ஆண்டு சந்தா ₹100

## நிலையில்லா அன்பு

மனிதர்களின் அன்பு கால சூழ்நிலைக்கேற்ப,
தேவைக்கேற்ப மாறக்கூடியது

# உள்ளே...


4



உங்களை ஒதுக்கிய பெற்றோர், உறவினர்கள் முன்னிலையில் தலைநிமிர்ந்து நடக்கலாம்!

9



எல்லா பாடங்களிலும் அரியர்ஸ் வந்தது. 2வது வருடம் என் படிப்பை முற்றிலும் விட்டு விட்டேன்!

20



இயேசுவை தன் சொந்தத் தகப்பனைப்போல அவள் நேசித்தாள்!

32



விதையானது நிலத்தில் முழுமையாக புதைக்கப்படாமல் இருந்தால் கனிகொடுக்க முடியாது!



வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

ஆசிரியர்:
**மோகன் சி. லாசரஸ்**

இணை ஆசிரியர்:
**அவினாஷ்**

ஆசிரியர் குழு:
**ரெக்ஸ் கிளமென்ட்**
**பிரிசில்லா பால் | ஜிஷ்யா**
**ஜான் இராஜேந்திரன்**
**லீனா அவினாஷ்**
**ரெபேக்கா | ரேச்சல்**

வடிவமைப்பு: **வின்சென்ட்**

நிர்வாகம்: **பெனீட்டா**


**SMS or WhatsApp**

இப்பத்திரிகையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whatsapp மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

**9750955547**

## Feedback

உணர்வுகள், Karoly Takacs வரலாறு மற்றும் இலக்குகள் பகுதி எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. - சாமுவேல், களக்காடு

வாலிபர் உலகம் பத்திரிகையில் Heart Beat பகுதி எனக்கு ஆலோசனை கொடுத்தது போன்று இருந்தது - ராஜேஷ், சென்னை

வாலிபர் உலகம் பத்திரிகையில் "அழகான கண்கள்" என்ற பகுதியில் வந்த சகோதரர் அவர்களின் சாட்சி என் மனதை மிகவும் தொட்டது - அனு, நாகர்கோயில்


## சந்தா விபரம்

தனிப் பிரதி
₹10

ஆண்டு சந்தா
₹100

ஆயுள் சந்தா
₹1000

**Mo / Cheque / DD :** "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

***வாலிபர் உலகம் பத்திரிகை சந்தா மற்றும் வாலிபர் ஊழியத்திற்கு நீங்கள் அனுப்பும் காணிக்கைகளை நாலுமாவடி முகவரிக்கு "வாலிபர் ஊழியம்" என்று குறிப்பிட்டு அனுப்பவும்.***



எங்களது முகவரி: **இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211 Phone: 04639-220022. Cell:9750955547
youth@jesusredeems.org | www.jesusredeems.com | www.youthworld.in

# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!



இருபதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இணைந்து கட்டிய கட்டிடம் அது, இக் கட்டிதத்தை கட்டி முடிக்க 20 ஆண்டுகள் ஆனது. UNESCOவினால் அங்கீகரிக் கப்பட்ட 7 அதிசயங்களில் ஒன்று. இந்தியாவின் பெருமையை தலைநிமிர செய்த கட்டிடம் தாஜ்மஹால். இந்த கட்டிடத்தை பார்த்து பல வல்லுநர்கள் வியந்துள்ளனர். தன்னுடைய அன்பை வெளிப்படுத்திய ஒரு அரசர். தான் நேசிப்பவர்களுக்காக பல காரியங்களை செய்யும் இந்த உலகில், தான் நேசித்த ஒருவர் இல்லாதபோதும், அவருக்காக ஒரு மாளிகையை கட்டிய அரசர், இதுதான் சரித் திரம். ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் நேசித்த நபரை அடைய முடியவில்லையென்றால், தன்னை மாய்த்துக்கொள்வதையும், நேசத்தை மறுத்தால் நேசித்தவரையே நெஞ்சில் குத்துவதும், இன்றைய கலாச்சாரம் ஆகிவிட்டது.

கல்லறை கூட நம் காதலை பிரிக்க முடியாத அன்பே என்று பரவசமாக வசனம் பேசும் இளைஞர்கள், கல்லூரி கதவை தாண்டியதும் தங்கள் காதலை மறப்பது சகஜமாகிவிட்டது. “யானைக்கும் அடி சறுக் கும்” என்பதுபோல பல கட்டங்களைத் தாண்டி வெற்றி நடை போட்ட பல வாலிபர்கள் இந்த காதல் கட்டத்தில் வரும்போது மாத்திரம் அவர்களை மறந்து, விழுந்து, சிலர் உடைந்து, ஓய்ந்து போகிறார்கள்.

இப்படி வாலிபர்களை காதல் என்ற பொய்யான மாயவலையில் விழவைக்க பல யுக்திகளை நாளுக்குநாள் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறான். வாலிபர்கள் தங்கள் நோக்கத்தையும், இலக்கையும் அடைய விடாமல் திசைதிருப்ப அவன் பயன்படுத்தும் முக்கிய ஆஸ்திரம் “காதல்”.

வாலிப நாட்களில் இவ்வகையான உணர்வுகளை மேற்கொண்டு, தங்கள் நோக்கத்தை அறிந்து ஓடும் சில யோசேப்புகளும், தானியேல்களும், யோசுவாக்களும் உண்டு. அதேநேரத்தில் Curi- osity என்ற பெயரில் அப்படி என்னதான் இருக்கு, அதையும்தான் பார்ப்போமே என்று சொல்லி, அஜாக்கிரதையாய் இருந்து தங்கள் நோக்கத்தை மறந்து, இலக்கை இழந்து தவிக்கும், பரிதாபமான சிம்சோன்களும் பலர் இன்னும் மாவரைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இன்றைக்கு உலகம் போகும் போக்கில் போவது செத்த மீனுக்கு சமானம். உயிருள்ள மீன், ஓடுகின்ற தண்ணீரை எதிர்த்து நீச்சல் போடும். உலகம் என்னதான் கவர்ச்சியான காரியங்களையும், விசித்திர மான வித்தைகளையும் காட்டினாலும் எதற்கும் மயங்காமலும், அஞ்சாமலும் துணிந்து பரிசுத்தத்தை காத்துக் கொள்ளும் பினெகாசின் தலைமுறையாய் நாம் எழும்ப வேண்டும்.

எத்தனை இச்சையான, பாவமான சூழல்கள் சூழ்ந்து நின்றாலும் எல்லாவற்றையும் உதறி தள்ளிவிட்டு, தன் மீது எந்த பாவ தூசி ஒட்டாதபடி ஓடுகின்ற விசுவாச சந்ததி எழும்ப வேண்டும்.

அன்பு வாலிபனே! இப்படி ஒரு வைராக்கியமுள்ள சந்ததியை, உன்னை உண்டாக்கிய, உன் மேல் அன்பு வைத்து, உனக்காய் தாஜ்மஹாலைவிட பிரம்மாண்டமான ஆசீர்வாதத்தை வைத்து காத்துக் கொண்டிருக்கும் உன் அன்புநேசர் தேடிக் கொண்டிருக்கிறார்!

அவர் சேனையில் நீ இணையும்போது பல வாலிப உள்ளங்களை மீட்டு அவர் பக்கம் திருப்பலாம்.

**“இன்றைக்கு நீ அவரிடம் உண்மையாய் திரும்பினால்,**
**நாளை தாவீதைபோல அவரண்டை பலரை திருப்பிக் கொள்வாய்!”** ●



நிலைத்து நில்!
நிமிர்ந்து நில்!!

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**

ஆலோசனை
அவி

நான் சிறுவயதிலேயே எனது தாயை இழந்துவிட்டேன். எனது அப்பா வேறு திருமணம் செய்து அவர்கள் குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். நான் எனது பாட்டியின் வீட்டில் வளர்ந்து வருகி றேன். என்னிடம் அன்பாய் பேசிப் பழகுவதற்கும் என்னை அரவ ணைத்து ஆதரிப்பதற்கும் யாரும் இல்லை. என் உறவினர்கள்கூட என்னிடம் அன்பாக பேசமாட்டார் கள். இப்பொழுது நான் 12ஆம் வகுப்பு படித்து வருகிறேன். ஒரு IAS ஆபீசர் ஆகவேண்டு மென்பது என் விருப்பம். என்னைப் போன்ற பெண் குழந்தைகளுக்கு உதவ வேண்டும். நான் அடிக்கடி என் தோழியின் வீட்டிற்கு சென்று படிக்கும்போது அவளின் அண்ணன் ராகுலோடு சகஜமாக பேசுவேன். அவள் குடும்பத்தில் உள்ள அனை வரும் என்னோடு பாசமாக இருப் பார்கள். அவர்கள் அனைவரின் அன்பான பேச்சும் அரவணைப்பும் என்னை புதிய உலகத்திற்கு கொண்டு சென்றதுபோல ஒரு அனு பவம். இப்பொழுது ராகுலோடு என்னுடைய உறவு சற்று அதிகரித்து அது காதலாய் மலர்ந்துவிட்டது. அவர்தான் என் வாழ்க்கைத் துணை என்று தோன்றுகிறது. ராகுலின் அன்பான பேச்சும், பாசமும் என்னுடைய கவலைகளை மறக்கச் செய்கின்றது. ஆனால் இப் பொழுது என்னால் படிக்க முடிய வில்லை. இலக்கு ஒருபக்கம், இன் பம் ஒரு பக்கம் என்னை இழுப்பது போல் உணருகிறேன். எனக்கு உதவி செய்யுங்கள்!

– ராணி,
திருப்பத்தூர்




Heart Beat

# அன்பைத் தேடி...

ராணி! உங்களின் வேதனையான கடிதம், உங்களின் உள்ளான தேவையையும் பூர்த்தியாகாத அன்பையும் புரிய வைக்கின்றது. ஒரு தாயை இழந்த குழந்தையின் ஏக்கமும், வளர்ந்து வரும் பருவத்தில் ஒரு தாயின் அன்பும், அரவணைப்பும் இன்றி அந்த பெண் குழந்தை படும் துன்பமும், வாடலும் நம் சமுதாயம் நன்கு அறிந்த உண்மை. உங்களின் வாழ்க்கையில் தகப்பனுடைய அன்பும் ஆதரவும் கிடைக்காதது வேதனையின் உச்சம். ஆனால் தற்போது ராணி! உங்களின் குழப்பம் என்னவென்றால், தற்செயலாய் தோன்றி அழகிய உறவைத் தொடர்வதா அல்லது துண்டிப்பதா? ராணி! உங்களின் புதிய உறவு உங்களுக்கு கொடுக்கும் உற்சாகமும், பாசமும் உங்களை ஒரு புதிய உலகத் திற்கு கொண்டு சென்றிருப்பது உண்மைதான்.

ஆனால் உங்களின் அழிக்க முடியாத ஒரு கனவு, ஒரு IAS ஆகவேண்டும். உங் களைப் போன்ற தாயின் அன்பை இழந்து வாடும் இளம் நெஞ்சங்களுக்கு, நீங்கள் சரியான வழிகாட்ட வேண்டும் என்ற அந்தக் கனவு, நனவாக மாற வாய்ப்பு உண்டா? என்று சோதித்துப் பாருங்கள்.

ராணி! நீங்கள் கடந்துவந்த பாதைகள் சற்று வேதனையான பாதைகள் என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு நாள் காலையும் நீங்கள் கண்ணீர் வடித்திருக்க லாம். அன்புக்காக ஏங்கி நின்ற வேளையில் உங்களை அரவணைக்க உறவினர் கள் தவறி இருக்கலாம். இப்பொழுது தோன்றிய உறவுகள் உங்களுக்கு சந்தோ ஷத்தைத் தந்திருக்கலாம். குறிப்பாக ராகுலோடு உங்கள் புதிய உறவு, நீங்கள் எதிர் பார்த்த நேசத்தை உங்களுக்கு கொடுத்திருக்கலாம். அவனின் அன்பான வார்த்தை, உங்கள் அஸ்தமனமான வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கையாக தோன்றி இருக்கலாம்.

ஆனால், உங்களின் IAS கனவு நனவாக மாறமுடியாமல் போகும் அபாயமும் உள்ளது என்பதை நீங்கள் அறிய வேண்டும். தற்போது ஏற்பட்ட அந்த உறவின்

விளைவால் உங்களின் படிப்பு பாதிக்கப்பட்டுவிட்டது. 12வது படிக்கும் நீங்கள் இந்த வயதில் உங்களின் வாழ்க்கை துணை தேர்வு செய்யும் ஒரு முக்கிய தீர்மானத்தை எடுப்பது சற்று தவறான ஒன்று.

இந்தப் பருவம் படிக்கும் பருவம். உங்களின் மனம் அலைபாயும் வயது இது. மேலும் உங்கள் மீது அன்பு செலுத்தும் ஒருவரை தவிர்க்க முடியாதது தான். ஆனால் உங்களின் வாழ்க்கையை பிரச்சனைக்குரிய ஒன்றாக மாற்றுவதும், அல்லது சாதனை படைக்கும் தெளிவான தீர்மானத்தை எடுத்து, அதனை பலருக்கு பாடமாக மாற்றுவதும் உங்களின் கையில் தான் உள்ளது








## இந்த உறவை தவிர்த்தால்...

- உங்களின் கனவு போன்று ஒரு IAS ஆபீசராக மாறி, உங்களைப் போன்ற சிறுமிகளுக்கு பல நன்மைகளைச் செய்யலாம்.
- ஒரு உற்சாகமூட்டும் பேச்சாளராக மாறி கண்ணீரோடு வாழும் பல பெண்களை ஊக்குவிக்கும், உற்சாக-மூட்டும் ஒரு கருவியாக மாறலாம்.
- இந்த சூழலில் படிக்க முடியும், நீங்கள் உங்கள் சூழ்நிலையை மாற்ற முடியும் என்ற சவாலை பெண்களுக்கு முன்பாக வைக்கலாம்.
- உங்களை ஒதுக்கிய பெற்றோர், உறவினர்கள் முன்னிலையில் தலை நிமிர்ந்து நடக்கலாம்.
- உங்களை ஒதுக்கிய அநேகர் முன்னால் சாதனையாளராக வலம் வரலாம்.

## இந்த உறவை தொடர்ந்தால்...

- தற்காலிகமாக இன்பமான உலகில் வாழ்ந்து, பின்னர் புலம்பி அழ வாய்ப்பு உண்டு.
- ராகுலின் அன்பும் பாசமும் உங்கள் மீதான ஈடுபாடும் மாற வாய்ப்பு உண்டு.
- IAS ஆபிசர் என்ற பதவி ஒரு வாக்கியமாய் தோன்றி மறையலாம்.
- பலர் உங்களை ஏளனமாக பேச வாய்ப்பு உண்டு.
- ஒரு காலகட்டத்தில், உங்களின் தீர்மானம், தவறானது என்று பலரும் சுட்டிக் காட்ட நேரிடும்.
- உங்களின் கவலை கண்ணீரும் தொடர வாய்ப்பு உண்டு.



**யோசித்து செயல்படுங்கள்! உங்களுக்கு உதவி செய்ய இயேசு உண்டு என்பதை மறக்க வேண்டாம்! எந்தவித சூழ்நிலையிலும் அவரால் உங்களுக்கு உதவ முடியும்!** ●

**வாலிபர் தொண்டாட்டம்**

இடம் பின்னர் அறிவிக்கப்படும்

**25 ஏப்ரல்**

**5 - 9 pm**

**மும்பையில்**

**செய்தி :**
**இயேசு விடுவிக்கிறார்**
**வாலிபர் குழுவினர்**

**9004882470**












# அலறியது ஆஸ்திரேலியா

இந்திய கிரிக்கெட் அணி 71 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலியா மண்ணில் டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்துள்ளது. கடைசி 5 முறை இந்திய அணி ஆஸ்திரேலியாவிற்கு சென்றபோது அனைத்து போட்டிகளிலும் படுதோல்வி அடைந்தது. ஆஸ்திரேலியாவை வீழ்த்துவது மிகவும் கடினமாக காணப்பட்டது.

கிரிக்கெட் விமர்சகர்கள் மற்றும் வர்ணனையாளர்கள் “இந்தியா சொந்த நாட்டில் விளையாடும்போது புலியை போலவும், வெளி நாடுகளில் விளையாடும்போது பூனையைப் போலவும் விளையாடுகிறது” என்று விமர்ச்சித்தார்கள். எப்போதும் போல இம்முறையும் இந்தியாவிற்கு இந்தத் தொடர் சவாலாக இருக்கும் என்றே நினைத்தார்கள். ஆனால் இந்த முறை இந்திய கிரிக்கெட் அணி தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவை அவர்களின் சொந்த மண்ணில் வீழ்த்தி சாதனை படைத்தது. இதை அனைவரும் பார்த்திருப்போம், வெற்றியைக் கொண்டாடியிருப்போம். ஆனால் இந்த வெற்றி எளிதாக வந்துவிட்டதா? அவர்கள் வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்தது என்ன?

**நல்ல அணுகுமுறை:** இதற்கு முன்பாக பல தோல்விகளை சந்தித்தாலும் இந்த முறை நிச்சயமாக வெற்றிபெற முடியும் என்கிற "Positive Frame of Mind" உடன் சென்றது.

**திட்டமிடுதல்:** பேட்ஸ்மேனை எப்படி வீழ்த்த வேண்டும் என்று திட்டமிட்டு, அதை சரியான முறையில் செயல்படுத்தியது.

**பொறுமை:** டெஸ்ட் மேச் என்றாலே பொறுமை மிகவும் அவசியம். எதிரணி வீரர்கள் எளிதில் தவறு செய்ய மாட்டார்கள். எனவே பொறுமையாக காத்திருந்து, அவர்கள் தவறு செய்யும்போது அதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, அழுத்தம் கொடுத்து வெற்றி பெற்றது.

**ஆய்வு:** எதிரணியின் பலம், பலவீனத்தை ஆராய்ந்து, ஆட்டத்தின் சூழ்நிலைக்கு ஏற்றபடி பேட்டிங், பவுலிங் செய்தது.

**தன்னம்பிக்கை:** அணியில் முக்கியமான வீரர்கள் ஆட்டமிழந்தாலும் மற்ற வீரர்கள் எழும்பி அணியின் சரிவிலிருந்து மீட்டது.

அன்பு வாலிபர்களே! நீங்கள் பொது தேர்விற்காகவோ, கல்லூரி செமஸ்டர் தேர்விற்காகவோ, வேலைக்கான நேர்காணலுக்காகவோ IAS, IPS, Bankற்காக அல்லது உங்களுடைய துறையில் சாதிப்பதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கலாம். இதுவரை பல தோல்விகளைக் கண்டு நம்பிக்கை யற்று, சோர்ந்துபோன நிலையில் இதை வாசித்துக் கொண்டிருப்பீர்களானால், கவலைப்படாதிருங்கள்! சோர்ந்து போகாதிருங்கள்! நீங்கள் மீண்டும் எழும்ப முடியும், சாதிக்க முடியும். நீங்கள் செய்கிற எந்த ஒரு காரியத்திலும் ஒரு திட்டமிடுதலும், தன்னம்பிக்கையும், அதையே பின் தொடர்வதற்கு பொறுமையும் இருக்குமானால், நீங்கள் சாதித்து உங்கள் பள்ளிக்கு, கல்லூரிக்கு, பெற்றோருக்கு, ஏன் உங்கள் தேசத்திற்கே பெருமை சேர்க்கலாம்!

**நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்.**
(நீதி.24:16). ●

## முகம் அழகு பெற...



- மஞ்சள் தூளும் சந்தனத் தூளும் ஆலிவ் எண்ணெயில் கலந்து உடம்பில் தேய்த்து 10 நிமிடம் கழித்து குளிக்க முகமும், தேகமும் மினுமினுப்பாகும்.
- உங்கள் சருமம் உலராமல் பளபளப்புடன் திகழ, தினமும் சிறிதளவு பசும்பாலை உடல் முழுக்க தேய்த்துவிட்டு பின்பு குளியுங்கள்.
- எலுமிச்சை சாறுடன் சிறிது சூடான தேன் கலந்து முகத்தில் தடவி அது உலர்ந்தபின் முகம் கழுவுங்கள், முகம் பளிச்சென ஆகும்.
- வெந்நீரைவிட சாதாரண தண்ணீரில் குளிப்பது நல்லது. குளித்தபின் துணியால் அழுத்தித் துடைக்காமல் மென்மையாக ஒற்றி துடைப்பது சருமத்திற்கு பாதுகாப்பு.
- தோல் பளபளப்பாக இருக்க வைட்டமின் 'C' நிறைந்த உணவு வகைகளை உட்கொள்ளுங்கள்.
- கொதிக்க வைத்த கேரட் சாறினை முகத்திலும், உடம்பிலும் தேய்த்துக் குளிக்க முகமும், தேகமும் பளபளப்பாகும்.
- பாலில் எலுமிச்சை சாறு கலந்து உடம்பில் தேய்த்துக் குளிக்க, முகமும் தேகமும் பளிச்சிடும்.

### வேதாகம தேசம்

# கப்பர்நகூம்



கப்பர்நகூம்

கப்பர்நகூம் என்பது வேதத்தோடு தொடர்புடைய ஒரு பாலஸ்தீன ஊர் ஆகும். அங்கு மீன்படித் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தது. இந்த ஊர் கலிலேயா கடல் என்று அழைக்கப்படுகின்ற கெனசரேத்து ஏரிக்கரையில் அமைந்தது. கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின் கப்பர் நகூம் என்றழைக்கப்பட்டது. ஆனால் 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஆராய்வு களின் பயனாக இன்று அதன் சீரும் சிறப்பும் வெளியுலகத்திற்கு தெரிய வந்துள்ளன.



ஒலிவ எண்ணெய் செக்கு



சீஷர்களை அழைத்த இடம்



பேதுருவின் வீடு



ஜெப ஆலயத்தில் உபதேசிக்கிறார்

### இயேசுவும் கப்பர்நகூமும்...

- இயேசு கப்பர்நகூமில் இருந்தபோது தான், பேதுரு, அந்திரேயா, யாக் கோபு, யோவான் ஆகியோரை சீஷர்க ளாக அழைத்தார் (மத்.4:18-21).
- இயேசு கப்பர்நகூமில் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் உபதேசித்தார் (மத். 11:23; லூக்.4:31; யோவான் 6:59).
- இயேசு பேதுருவின் வீட்டிற்கு சென்று அங்கு பேதுருவின் மாமி காய்ச் சலால் அவதியுற்றதைக் கண்டு, அவரை குணப்படுத்தினார் (லூக்.4:39).
- நூற்றுக்கு அதிபதியின் வேலைக்கா ரனை சொஸ்தமாக்கினார் (மத். 8:5-13; லூக்.7:1-10; யோவான் 4:43-54).
- ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவி பிடித்திருந்த மனிதனுக்கு விடு தலை கொடுத்தார் (லூக்.4:31-36).
- திமிர்வாதக்காரனை குணமாக்கி னார் (மத்.9:1-8; மாற்.2:7-12; லூக்.5:17-26).
- இராஜாவின் மனுஷனுடைய மகனை வார்த்தையால் குண மாக்கினார் (யோவான் 4:46-54)

### இன்றும் கப்பர்நகூமில் சான்றாக திகழும் சாட்சிகள்

- ➢ பேதுருவின் வீடு
- ➢ ஒலிவ எண்ணெய் செக்கு
- ➢ கப்பர்நகூமில் யூத தொழுகைக் கூடம்
- ➢ கப்பர்நகூமுக்கு அருகே கண்டெடுத்த பழங்கால மீன்பிடி படகு.

– ரேச்சல் காட்சன்

# இயேசுவின் நண்பன்
## ஜெபக்குழு





**ஆவியானவரோடு இணைந்து ஜெபிக்க பழகிக் கொள்ளுங்கள். நம்முடைய ஜெபத்தில் நமக்கு உதவி செய்கிற நல்ல நண்பர் பரிசுத்த ஆவியானவர்! இன்று முதல் கர்த்தரோடு உறவாட ஆரம்பியுங்கள்! நாளை அல்ல... இன்றே அது உங்கள் அனுபவமாக மாறட்டும்!**

தமிழ்நாட்டில் செயல்படும் 285 இயேசுவின் நண்பன் ஜெபக்குழுக்களில் சுமார் 1710 வாலிபர்கள் நம் தேசத்தின் இரட்சிப்பிற்காகவும், எழுப்புதலுக்காவும் ஜெபித்து வருகிறார்கள். ஜெபக்குழுவாக இணைந்து ஜெபிப்பதால் இரண்டு காரியங்கள் நடைபெறுகின்றது. ஒன்று ஜெபிக்கும் வாலிபனின் வாழ்க்கை மாறுகிறது. இரண்டாவதாக அவன் ஜெபிக்கும் போது அவனை சுற்றியுள்ள சபையிலும், சமுதாயத்திலும் மாற்றம் ஏற்படுகிறது. நீங்கள் பாவத்தை மேற்கொள்ள, ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலப்பட ஒரு ஜெபக்குழுவோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். ஜெபமும், ஐக்கியமும் கிறிஸ்துவுக்குள்ளாக உங்களை நிலைநிறுத்தும்!

### ஒரு மணி நேரம் குழுவாக எப்படி ஜெபிக்கலாம்

**15 நிமிடம் :**
பாடல், துதி ஆராதனை

**15 நிமிடம் :**
வேதப் பகுதியை தியானித்தல்

**25 நிமிடம் :**
வாலிபர்களுக்காக, சபைகளுக்காக, தேசத்திற்காக

**5 நிமிடம்:**
குழுவிலுள்ளவர்களின் படிப்பிற்காக / வேலைக்காக / தேவைகளுக்கான ஜெபம்

உங்கள் பகுதியில் இத்தகைய ஜெபக்குழு அமைக்க விரும்பினால் எங்களை அணுகவும் 7598155502

சாட்சி
தொகுப்பு : ஜிஷ்யா

# வெறுமை மாறியது

**சகோ. சாமுவேல் ராஜ் அவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் நடந்த சுவாரஸ்யமான காரியங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்...**



## எனது குடும்பம்...

எனது பெயர் சாமுவேல் ராஜ், எனது ஊர் கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை. எனது அப்பா இந்து குடும்பத்தை சேர்ந்தவர்கள். அம்மா ரோமன் கத்தோலிக்க குடும்பத்தை சேர்ந்தவர்கள். எனது அம்மாவின் தாயார் ஒரு விபத்தில் சிக்கி மிகவும் கஷ்டப்படும்போது, ஆலயத்தில் போய் ஜெபித்து சுகம் கிடைத்ததால் அவர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். அப்பா ஒரு ஆலயத்தில் பாடிய பாடலைக் கேட்டு அதன் மூலம் அப்பா இயேசுவை அறிந்து, ஒரு போதகர் மூலமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். எனக்கு ஒரு அக்கா இருக்கிறாள்.

## எனது சிறு பிராயம்...

நான் பிறக்கும்போது அம்மாவிற்கு பனிக்குடம் உடையாததால் குழந்தை கருவிலேயே இறந்து விடும் என்று மருத்துவர்கள் சொன்னார்களாம். நான் பிறந்தபோது எனக்கு எந்தவிதமான மூச்சுப் பேச்சு இல்லாததால் இன்குபேட்டரில் வைத்து தான் என்னை பாதுகாத்தார்கள். பிறந்த ஒன்றிரண்டு நாட்களில் சளி அதிகமாகி நிமோனியாவால் பாதிக்கப்பட்டு மரண தருவாய்க்கு சென்றேன். அந்த மருத்துவமனையில் இருந்த அநேக குழந்தைகள் இறந்து போனதை என் அம்மா பார்த்து, “என் குழந்தைக்கு உயிர் கொடுத்தால் நான் ஊழியத்திற்கு அவனை ஒப்புக் கொடுக்கிறேன்” என்று ஜெபித்து சாமுவேல் ராஜ் என்ற பெயரையும் சூட்டினார்கள். கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தைக் கட்டளையிட்டார். நான் சிறு வயதாக இருக்கும்போது என் குடும்பம் வீட்டு வாடகை செலுத்த முடியாமல், சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்ட சூழ்நிலையில் தான் இருந்தோம்.

## மறக்க முடியாதவை...

நான் 5 வயதாக இருக்கும்போது பைக்கில் சென்று கொண்டிருக்கும்போது கீழே விழுந்து கப்பிக்கல் நாக்கில் குத்தி, நாக்கு வெட்டப்பட்டு தையல் போடபட்டதால், இவனால் பேச முடியாது என்று மருத்துவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நான் பேசுவது தேவனுடைய கிருபை. 5ஆம் வகுப்பு படிக்கும் அம்மை வந்து மிகவும் கஷ்டப்பட்டு கொஞ்ச நாட்களில் வாந்தியினால் மிகவும் பாதிக்கப்பட்டு ஜெபத்தினால் சுகம் கொடுத்தார். 8 வயதாக இருக்கும்போது கீழே விழுந்து தலையில் அடிபட்டு தையல் போட்டிருந்தேன். ஒரு வாரத்திற்கு பின்பு திரும்பவும் பைக்கில் போகும்போது, ஒரு விபத்து ஏற்பட்டு தையல் போட்ட இடத்தில் அடிபட்டு மிகப்பெரிய ஆபத்தான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன். இப்படி ஒன்றுமாறி ஒன்று வந்து கொண்டே இருந்தது.

> சிறு வயதாக இருக்கும் போது என் குடும்பம் வீட்டு வாடகை செலுத்த முடியாமல், சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்ட சூழ்நிலை!

சகோ. சாமுவேல் ராஜ் குடும்பத்தாருடன்





“சாம், நீ எனக்கு வேண்டும், நீ என் ஊழியத்திற்கு வேண்டும்” என்ற சத்தம், இந்த முறையும் அந்த சத்தத்தை அசட்டை பண்ணினேன்.

## இளமைப் பருவம்

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆலயத்திற்கு ஒழுங்காகப் போவேன். நன்றாகப் படித்தும் வந்தேன். நான் சிறுவயதிலேயே ஊழியத்திற்கு அர்ப் பணிக்கப்பட்டதால் ஊழியனாக வர வேண்டுமென்பதே என்னுடைய ஆவ லாக இருந்தது. எனக்கு அப்போது ஊழியம் என்றால் என்னவென்றே தெரியாது. நான் 5ஆம் வகுப்பு படிக்கும் போதே எங்கள் கிராமத்தில் உள்ள சிறுபிள்ளைகளை அழைத்து வந்து பாடல்கள் பாடுவது, மற்றும் டிரம்பேடு, கீபோர்டு வாசிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் நான் எந்த இசை கருவிகளும் வாங்க வாய்ப்பில்லை. ஆகையால் இரும்பு chair எடுத்து டிரம்பேடு போல அமைத்து, இரண்டு சிறு குச்சிகளை வைத்து அடித்து பாடுவேன்.

6ஆம் வகுப்பில் வேறு பள்ளிக்கு மாற்றப்பட்டேன். புதிய நண்பர்கள் கிடைத்ததும் எனது வாழ்க்கை மாற ஆரம்பித்தது. பள்ளி கிராமத்திற்குள் இருந்ததால் என்ன செய்தாலும் யாருக்கும் தெரியாது. ஆகையால் அடிக்கடி பள்ளிக்கு லீவு போட ஆரம் பித்தேன். சண்டை, வம்பு போன்ற சின்ன சின்ன பழக்கங்கள் வர ஆரம்பித்தது. இதன் மத்தியிலும் ஞாயிறன்று ஆலயத் திற்கு ஒழுங்காக சென்று கொண்டிருந்தேன்.

10ஆம் வகுப்பு தேர்வு முடித்தபின்பு தேவன் என்னை ஊழியத்திற்கு அழைத்தார். நான் இன்னும் படித்து முடிக்க வில்லை, படித்து முடித்துவிட்டு ஊழியத்திற்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டேன். 11ஆம் வகுப்பு படிக் கும்போது பலவிதமான கெட்ட காரி யங்களுக்கும், கெட்ட பழக்கவழக்கங் களுக்கும் உட்பட்டேன். என் வீட்டில் வறுமை, சந்தோஷமே இருக்காது. சந்தோஷத்திற்காக நானும் என்னு டைய நண்பனும் பள்ளி நேரத்தில் போய் குடித்துவிட்டு வருவோம். ஒரு பக்கம் எனக்குள் கெட்ட பழக்கம் இருந் தாலும், ஒருபக்கம் நான் ஊழியக் காரன் என்ற உணர்வு வரும். அந்த எண்ணம் வரும்போது இயேசுவிடம் போய் அழுது மன்னிப்பு கேட்டு திரும்ப ஆண்டவர் பக்கம் வருவதுமாக என் வாழ்க்கை இருந்தது.

## எனது பள்ளிப் படிப்பு...

12ஆம் வகுப்பில் பள்ளி தேர்வில் எல்லா பாடங்களிலும் தோல்வியாக இருக்கும். ஆனால் வீட்டில் எல்லா பாடங்களிலும் நல்ல மதிப்பெண்கள் என்று சொல்லி ஏமாற்றிவிடு வேன். கடைசியாக அரசாங்க தேர்வில் Physics பாடத்தில் தோல்வி அடைந்தேன். அந்த ஒரு பாடத்தையும் எழுதி தேவ கிருபையால் வெற்றி பெற்றேன். ஆண்டவர் மறுபடியும் இரண்டா வது முறையாக “சாம், நீ எனக்கு வேண் டும், நீ என் ஊழியத்திற்கு வேண்டும்” என்ற சத்தம், இந்த முறை யும் அந்த சத்தத்தை அசட்டை பண்ணி னேன். நான் படித்து முடித்து என் வாழ்க்கை ஒரு நல்ல நிலைமைக்கு வந்தபிறகு ஊழியத்திற்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு கல்லூரி படிக்க சென்றேன்.

## கல்லூரி வாழ்க்கை...

நான் விரும்பாத கல்லூரியில் EEE படிக்க ஆரம்பித்தேன். அங்கு என் வாழ்க்கை மிகவும் மோசமான நிலைக்கு போனது. கல்லூரிக்கு போன முதல் நாளே காலையில் 10:30 மணிக்கு கல்லூரி கட் அடித்து சினிமா பார்ப்பது, பார்க் இப்படி நானும் என் நண்பனும் சுத்துவோம். இப்படி ஒருவருடம் முடிந் தது. அந்த வருடம் எல்லா பாடங்களி லும் அரியர்ஸ் வந்தது. 2வது வருடம் என் படிப்பை முற்றிலும் விட்டு விட் டேன். கல்லூரியே எங்களை நீங்கள் எதற்கு சரிபட்டு வரமாட்டீர்கள் என்று ஓரம்கட்டி விட்டார்கள்.

தினமும் இரண்டு சினிமா பார்த்து விட்டு சாயங்காலம் கல்லூரி பஸ்ஸில் ஏறி, வீட்டிற்கு வந்துவிடுவேன். இதனால் என் வீட்டில் யாருக்கும் என்மேல் எந்தவித மான சந்தேகமும் வரவில்லை. எனக்கு

மூன்று வருடங்க ளில் தேவன் எனக்கு பாடல்களை கொடுத்து அதன் மூலம் தேவன் பெரிய காரியங்களை செய்து வருகிறார்!



தியேட்டர் தான் வீடு. புகை, குடி போன்ற எல்லா கெட்ட பழக்கங்களோடுதான் என்னுடைய கல்லூரி வாழ்க்கை சென் றது. தப்பு பண்ணும்போது எனக்குள் ஒரு குற்றவுணர்வு வந்துகொண்டே இருக்கும். ஆண்டவர் 2 முறை அழைத் தார். அதற்கும் நான் செவி சாய்க்க வில்லை. ஆலயத்துக்கு கடமைக்காக சென்று வருவேன். எல்லாமே மறந்த ஒரு வாழ்க்கை தான் வாழ்ந்து வந் தேன்.

கல்லூரி கடைசி வருடம் எல்லோரையும் வெற்றிபெற வைக்க வேண்டுமென்று ஸ்பெஷல் வகுப்பு வைத்தார்கள். எனக்கு தலைக்கு மேல் அரியர்ஸ் இருந்தது. அந்த ஸ்பெஷல் கிளாசிலும் என் நண் பர்கள் குடித்துக்கொண்டு வந்து பிரச் சனை பண்ணினதால் அது போலீஸ் கேஸ் ஆகி FIR போட்டார்கள். நான் அந்த கேசில் இருந்து தப்பிக்கப்பட் டேன். இல்லையென்றால் நான் பாஸ் போர்ட் எடுக்கவோ வெளி தேசங்க ளுக்கு செல்லவோ என்னால் இயலா மல் போயிருக்கும். இப்படியே என் கல் லூரி வாழ்க்கை நிம்மதி இல்லாமல் முடித்தேன். அடுத்து என்ன செய் வது என்ற நிலையில் நான் டிரம்பேடு வாசிப்பதால் அடிக்கடி எதாவது நிகழ்ச்சிகளுக்கு செல்வதுண்டு. இனி இசை தான் வாழ்க்கை என்ற முடி வோடு போய்க் கொண்டி ருந்தது.

ஆவிக்குரிய தகப்பனாக ஜேக்கப் கோஷி, மற்றும் ஜெபிக்கும் ஆவிக்குரிய நண்பர்களை தேவன் கொடுத்திருக்கிறார்

  

## திருப்புமுனை...

கல்லூரி முடித்த பின்பு இசை வாசிப்பதற்காக அநேக இடங்களுக்கு சென்று வருவேன். அப்படி 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் தேதி தேவனுக்கு பிரியமில்லாத அந்நிய தெய்வத்திற்கு இசை வாசிப்பதற்காக சென்றிருந்தேன். எனக்கு அந்த இடத்தில் போனபோது என்னுடைய ஆவி அங்கு ஒத்துவர வில்லை. ஆனாலும் வாசிப்பதற்காக போய்விட்டேன் என்பதால் வாசித்து வந்துவிட்டேன். ஆனால் இரவு எனக்கு நிம்மதி இல்லாமல் தூங்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். அந்த நாளி லும் "சாம் நீ எனக்கு தேவை" என்று ஆண்டவர் பேசினார். அந்த வார்த் தையையும் நான் அலட்சியம் செய் தேன். அடுத்தநாள் நான் அப்பாவின் தொழில் காரியமாக ஆட்டோவில் சென்றுகொண்டிருக்கும்போது எதிர் பாராதவிதமாக 23ஆம் தேதி விபத்து ஏற்பட்டு, கால் எலும்பு முறிந்து வெளியே தெரிந்தது. மருத்துவர்கள் நீங் கள் நடக்க முடியாது, பயணம் செய்ய செய்யக் கூடாது என்று சொன்னார். நான் இனி இருப்பது வீண் என்று 3 முறை தற்கொலை செய்து செத்து விடலாம் என்று தீர்மா னித்தேன். ஆனால் என்னால் எழுந்து போய் தற்கொலை செய்ய முடியாத சூழ்நிலை. அதுமட்டுமல்லாமல் சிறுவயதிலிருந்தே எனக்கு, "என் சுய பெலத்தினால் என்ன பிரச்சனை வந் தாலும் அதை

 

உடம்பு முழுவதும் விபத்தி னால் அடிபட்டு இரண்டு பெரிய அறுவை சிகிச்சை நடந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன்

என்னால் செய்ய முடியும் என்ற எண் ணம் எனக்குள் இருந்தது. ஆனால் என்னால் செய்ய முடியாமல் போய் விட்டது என்பதை படுக்கையில் இருக் கும்போது உணர்ந்து கொண்டேன்".

அறுவை சிகிச்சை முடிந்து என் காலில் கம்பி வைத்து கட்டி இருந்ததால், இரத் தம், சீழ் வடிந்து அதை சாப்பிடுவதற்காக ஒரு கூட்டம் எறும்புகள் என் காலில் குடியிருந்தது. என்னுடைய சுயபெலத்தி னால் எல்லாவற்றையும் செய்யலாம் என்று பார்த்தால் என் கண் முன்னா லேயே எறும்புகள் என் உடம்பை சாப் பிடுவதை பார்க்கும்போது மிகவும் கஷ் டமாக இருந்தது. சுயபெலத்தை சார்ந் திருப்பதை விட ஆண்டவரை சார்ந்திருப் பது நல்லது என்று தோன்றியது. அப் போது ஆண்டவர் "உன் சுயபெலன் செத் துபோனால் என்னுடைய பெலன் உனக்கு அதிகமாகும்" என்று சொன் னார். அதன்பின்புதான் ஆண்டவரைத் தேடினேன். ஆனால் என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். வீட்டிலும் நிறைய கடன் இருந்ததால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆகையால் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலைக்கு சேர்ந் தேன். அங்கு கொஞ்ச நாட்கள் வேலை பார்த்துவிட்டு வெளிநாட்டிற்கு சென்று வேலை பார்த்து வந்தேன். அங்கு



என்னை பரிசோதித்த மருத்துவர், "நீ உன் கடவுளிடம் வேண்டிக்கொள், எங்களால் முடிந்ததை செய்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். அப்போது தான் நான் எனக்குள் ஒரு எண்ணம் வந்தது, "உடம்பை குறித்து படித்தவர்கள்தான் மருத்துவர்கள். ஆனால் இந்த உடம்பை படைத்தவரே இயேசு. அவரால் எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வந்தபிறகு என் வாழ்க்கையே மாற ஆரம்பித்தது

வேலை செய்தாலும் என்னுடைய மனதில் தேவனுடைய வேலை செய்யாமல் வந்துவிட்டோமே என்ற எண்ணம் தான் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். 3 வருடத்திற்கு முன்பு எனது சகோதரியின் திருமணத்திற்காக இந்தியாவிற்கு வந்தேன். என் இருதயத்தில் ஒரு வெறுமை. நாம் திரும்பவும் வெளிநாட்டிற்கே சென்று விடலாமா என்று. ஆண்டவருடைய ஊழியத்தை செய்யமுடியாமல் போய்விட்டதே என்று மனதிற்குள் குழம்பிக்கொண்டிருந்தேன். வாழவே விருப்பம் இல்லை. என் வாழ்க்கை வெறுமையாய் விரக்தியோடு இருந்தது.

## ஊழிய அர்ப்பணிப்பு...

என் நண்பர்களின் வற்புறுத்தலினால் 2016-ல் வேதாகம கல்லூரியில் படிக்க ஆரம்பித்தேன். இப்போது B.Th. கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கிறேன். கர்த்தருடைய சித்தத்தின்படி தொலைதூர கல்வி மூலமாக B.A., Christian studies படித்து முதலாமாண்டில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றிருக்கிறேன். இப்போது இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். B.Th. படித்துக் கொண்டிருக்கும் போதே, தேவன் எனக்கு பாடல்களை கொடுத்து அதன் மூலம் தேவன் பெரிய காரியங்களை செய்து வருகிறார்.

Youttube மற்றும் வலைத்தளங்களில் பாடல்களை வெளியிட தேவன் கிருபை செய்தார். தேவனுடைய கிருபையால் பல இடங்களில் சென்று பாடல்களைப் பாடி மகிமைபடுத்தவும், என் வாழ்வில் தேவன் செய்த அற்புத சாட்சியை பகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை செய்து வருகிறார். எனக்கு ஆவிக்குரிய தகப்பனாக ஜேக்கப் கோஷி, மற்றும் ஜெபிக்கும் ஆவிக்குரிய நண்பர்களை தேவன் கொடுத்து என் ஊழியத்திற்கு உதவியாக இருக்கிறார்கள். எங்களது சபை போதகர் டேனியல் தயாநிதி அவர்கள் முதன்முதலாக எனக்கும் என் பெற்றோருக்கும் ஆவிக்குரிய வாழ்க்கையில் நடத்துவதற்கு மிகவும் உதவியாக இருந்தார்கள். போதகர் ஸ்டேன்லி அவர்கள் எனக்கு ஆவிக்குரிய தலைவராக இருந்து என்னை பயிற்றுவித்தார்கள்.

## வாலிபர்களுக்கு...

இயேசு அன்போடு அழைக்கும்போது அழைப்பை ஏற்று வந்தால் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால் முடியாது என்று வேறு பக்கமாக போவீர்களானால் வலையில் சிக்கின மீன் அழகாக வெளியே எடுக்கலாம், ஆனால் தூண்டிலில் சிக்கிக் கொண்டால், மீனாக தான் இருக்கும். ஆனால் அவை உயிரற்றது போல காணப்படும். எனவே அன்போடு அழைக்கும்போது அவர் அழைப்பை ஏற்று வந்தால் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்வார்.

போதகர் ஸ்டேன்லி





போதகர் டேனியல் தயாநிதி

ஆவிக்குரிய நண்பர்கள்



அன்போடு அழைக்கும்போது அவர் அழைப்பை ஏற்று வந்தால் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்வார்

**பிரியமான வாலிபர்களே! சாமுவேல் வாழ்க்கையில் பல தோல்விகளை சந்தித்தார். வியாதி, விபத்து, வறுமை ஒருபுறம் வாட்ட, கெட்டபழக்கங்களும் மறுபுறம் அவரை அழிக்க நினைத்தன. வாழ்க்கையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கும்போது, நம்பிக்கை நட்சத்திரமாகிய இயேசு சீர்குலைந்த அவருடைய வாழ்க்கையை சீரமைத்து, இன்று பலருக்கும் ஆசீர்வாதமாய் பயன்படுத்தி வருகிறார். அதே தேவன், உங்கள் வாழ்க்கையையும் சீரமைத்து உங்களை உயர்த்துவார்! அவரை பற்றிக் கொள்ளுங்கள்!** ●



# தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கு...

**இது தேர்வுகாலம். பல்வேறு போட்டி தேர்வுகள், அரசு நடத்தும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகள் என பல்வேறு தேர்வுகள் நெருங்கி கொண்டு இருக்கின்றன. அரசு பொது தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண் எடுத்தால்தான் நாம் நினைக்கும் படிப்பை குறைவான செலவில் படித்து நாம் நினைத்த வேலைக்குப் போக முடியும். தேர்விற்கு முன்னதாக நாம் பாடங்களைப் படிக்கும்போது மேற்கொள்ள வேண்டிய சில நடைமுறைகளை பார்ப்போம்...**



**படிக்கும் முறை:** படிக்கும்போது வெறுமனே புத்தகத்தை புரட்டி கொண்டிருந்தால் படித்தது நினைவில் நிற்காது. ஒரு பாடம் முடித்த உடனே அடுத்த பகுதிக்கு போகாமல் எழுதி பார்க்கும் போது படித்தது மறக்காமல் இருக்கும்.



**திட்டமிடுதல்:** படிப்பதற்கு முன்னால் நாம் எந்த நேரத்தில் என்ன படிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். ஒரு நாளில் 10 மணி நேரம் படித்தால், 2 மணி நேரம் படித்ததை மீண்டும் நினைவில் நிறுத்த வேண்டும்.



**சுயபரிசோதனை:** ஒரு நாளில் எந்தெந்த நேரத்தில் என்னென்ன படிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிடவேண்டும். தினமும் தூங்கப் போகும் முன், திட்டமிட்டதை சரியாக செய்து முடித்தீர்களா என சுயபரிசோதனை செய்ய வேண்டும்.



**கால அட்டவணை:** தேர்விற்கு 2 அல்லது 3 வாரம் இருக்கும்போதே புதிதாக படிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏற்கனவே படித்தப் பாடங்களை மீள்பார்வை செய்து நினைவில் நிறுத்திக் கொள்ள நேரம் ஒதுக்குங்கள்.



**நம்பிக்கை:** படிக்கும்போது இந்தப் பாடத்தை படித்து தேர்வில் சரியான முறையில் எழுதிவிடுவேன் என்ற நம்பிக்கையுடன் படிக்க வேண்டும். கவலையுடனோ, அச்சத்துடனோ படிக்கக் கூடாது. எதிர்மறையான எண்ணங்கள் இருக்கக் கூடாது.



**கவனம்:** முக்கியமான சமன்பாடுகள், சூத்திரங்கள் தனியாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். படிக்கும்போது பாட்டு கேட்பது, டி.வி. பார்த்துக் கொண்டு படிப்பது, வீட்டில் இருப்பவர்களிடம் பேசிக்கொண்டு படிப்பதை தவிர்க்க வேண்டும்.



**ஜெபம்:** படிப்பதற்கு முன்பாக, இயேசப்பா நான் படிக்க போகிறேன் எனக்கு ஞானம் தாங்க என்று ஜெபித்துவிட்டு படிக்க வேண்டும். எந்த பாடம் கடினமாக இருக்கிறதோ அதை அவரிடம் சொல்லி ஜெபியுங்கள். உங்கள் பெற்றோரின் ஜெப உதவியை கேளுங்கள்.



## பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளை அதிக மதிப்பெண் எடுக்க வைப்பதில் பெற்றோரின் பங்கு மிக முக்கிய மானது. மேல் குறிப்பிட்ட நடைமுறைகளை பிள்ளைகள் நடை முறைப்படுத்துகிறார்களா என்பதை பெற்றோராகிய நீங்கள் உறுதி செய்ய வேண்டும். பெற்றோர்கள் தான் மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். படித்ததை உங்கள் பிள்ளைகள் பார்க்காமல் எழுதவோ அல்லது உங்களிடம் ஒப்புவிக் கவோ சொல்ல வேண்டும். படிப்பைத் தவிர மற்ற காரியங் களில் அவர்கள் திசை திரும்பாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ●

வேதாகம

# புதையல் வேட்டை

Bible Quiz

வேதத்தில் உள்ள தம்பதிகளைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கு நேராக உள்ள கட்டங்களில் அவர்களின் பெயர்களால் நிரப்பி சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. இந்த தம்பதிகள் எப்பிராயீம் மலைதேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற மரத்தின்கீழே குடியிருந்தார்கள், இவர்கள் யார்?
2. கர்த்தருடைய ஆவியை சோதித்த தம்பதிகள் யார்?
3. தேவன் உரைத்ததால் சோரஸ்திரியை விவாகம் செய்தார் தீர்க்கன், இந்த தம்பதிகள் யார்?
4. இயேசு பட்டணங்கள்தோறும், கிராமங்கள் தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தபோது கூட இருந்த தம்பதிகள் யார்?
5. எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாய் இருந்த மகனைப் பெற்ற தம்பதிகள் யார்?
6. ஊழியப் பாதையில் அப்பொல்லோ என்னும் யூதனை சேர்த்துக்கொண்ட தம்பதிகள் யார்?
7. தேவனுக்கு வழியை ஆயத்தபண்ண வந்து, இயேசுவின் மனதைக் கவர்ந்த மகனைப் பெற்ற தம்பதிகள் யார்?
8. பவுலிடம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து சொல்லக் கேட்ட தம்பதிகள் யார்?
9. எருசலேமை பதினேழு வருஷம் ஆட்சி செய்த ராஜாவைப் பெற்ற தம்பதிகள் யார்?
10. பெத்லகேம் ஊரானாகிய போவாஸைப் பெற்ற தம்பதிகள் யார்?

## மனைவி




## கணவன்




கடந்த மாத வெற்றியாளர்
**எஸ்தர், பாளையங்கோட்டை**
அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

1. பச்சை (ஆதி.1:30)
2. வெண்மை (தானி.7:9)
3. சிவப்பு (ஏசாயா 1:18)
4. இளநீலநூல் (யாத் 28:31)
5. பச்சை (எரே 11:16)
6. சிவப்பு (ஆதி.25:25)
7. கறுப்பு (யோபு 30:29,30)
8. வெள்ளி (ஆதி.44:2)
9. வெண்மை (லூக் 9:29)
10. பொன் (வெளி.21:21)

**எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள் 15.02.2019**

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:
JESUS REDEEMS
YOUTH MINISTRIES
Nalumavadi,
Thoothukudi Dist - 629 211
Cell: 9750955547 | Tel: 04639- 220022
youth@jesusredeems.org

அலசல்
ஜிஷ்யா

# உணர்வுகள்

பகுதி 2

உணர்ச்சிகளைக் கையாளுவது எப்படி?





## காதல்

இந்த புதிய ஆண்டில் இருந்து ஒவ்வொரு மாதமும் உணர்வுகள் என்னும் புதிய பதிப்பை பார்த்து வருகிறோம். கடந்த மாதம் 'கோபம்' என்ற உணர்வை பற்றியும் அதனை கையாளுவது எப்படி என்பதையும் பார்த்தோம். அதே வரிசையில் இந்த மாதம், பதின் பருவத்தில் தோன்றும் 'காதல்' என்னும் உணர்வைப்பற்றி பார்க்கலாம். பருவம் அடையும் வயதை தொட்டவுடன், ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் சரீரத்திலும் பலவகையான மாற்றம் ஏற்படுவதை நாம் கவனித்தது மட்டுமல்லாமல், அதை அனுபவித்திருப்போம். இந்த சரீர வளர்ச்சி (Physical Growth) வெளியே பலருக்கும் தெரியும். நமக்குத் தெரியாத அல்லது புரியாத சில காரியங்கள் நம் சிந்தை மற்றும் உணர்வுகளில் சில ஹார்மோன்கள் சுரப்பதினால் ஏற்படுகின்றது (Psychological Changes).

இதனை நம்மால் முழுமையாக புரிந்துக் கொள்ள முடியாது. ஆனால் எதிர்பாலரை பார்க்கும்போது நம்மையும் அறியாமல் நம் மூளையில் உள்ள GNRH என்னும் ஹார்மோன் இந்த பருவத்திலிருந்து செயல்படத் துவங்கும். அந்த ஹார்மோன் செயல்பாட்டின் விளைவால் தான் எதிர்பாலரைப் (Oppsite sex) பார்க்கும்போது நம் மனதிற்குள் பல எண்ணங்களும், நம்மை சந்தோஷப்படுத்தும் சில உணர்வுகளும் எழும்புகின்றது. அவர்களை (ஆண்களை) கவர வேண்டும், அதற்கேற்ப ஆடை அணிய வேண்டும் என்ற எண்ணம் பெண்களுக்கும், பல பெண்கள் தன்னை திரும்பி பார்க்கனும்னு தலையை கலர் செய்து, பஸ்ஸில் foot-boardல தொங்கி விசில் அடிக்கனும், பைக்கில் வேகமாக பறந்து செல்லும் நம் வாலிபர்கள். இவையெல்லாம் உணர்வு அலைகள் பொங்குவதின் விளைவேயாகும். இப்படி ஒருவரைப் பார்க்கும்போது, திடீரென மனதிற்குள் சந்தோஷப்பட்டு, பரவசமடைவதும், பல ஆயிரகணக்கான எண்ணங்கள் எழுவதும், மனதில் பல பட்டாம்பூச்சிகள் பறப்பதும், கனவுலகில் மிதப்பதும், மனக்கோட்டையில் வாழ்வதும், 'அந்த' நபரை நினைத்துக் கொண்டேயிருப்பதும் காதல் எனும் உணர்வுகள்தானே..! இது எனக்கு மட்டும் தான் இருக்கிறதா? இப்படி எதிர்பாலரை பார்க்கும்போது ஈர்க்கப்படும் இந்த உணர்வு சரியானதா? இதனை எப்படி மேற்கொள்வது? என்று உங்கள் மனதிற்குள்ளேயே நீங்கள் பூட்டி வைத்திருக்கும் பல கேள்விகளுக்கான பதிலை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

லூட்டினைசிங் (Lutinizing) என்ற ஹார்மோன் உங்கள் மூளையில் உள்ள பிட்யூட்டரி கிளான்டில் (Pituitary Gland) சுரப்பதால், ஆண்களுக்கு டெஸ்டோஸ்டெரோன் (Testtosterone) என்ற

அமிலமும், பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் என்ற அமிலமும் சுரக்கிறது. இதுவே உங்கள் சரீரம், மூளை மற்றும் உணர்வுகளில் மாற்றத்தைக் கொண்டு வருகிறது. இதனால் நீங்கள் எதிர்பாலரிடம், அதாவது ஒரு பெண் ஆணோடும், ஒரு ஆண் பெண்ணோடும் ஈர்க்கப்படுவீர்கள்.

> **காதல் என்னும் அழகான உறவு உங்கள் திருமணத்திற்கான அன்பான பரிசு. அந்த குறிப்பிட்ட காலத்திற்கு முன்னால் அவசரப்படுவது, இச்சைக்கு இடம் கொடுப்பது, சுயநலமானதும் பாவமும் ஆகும்**

## தெரிந்துக் கொள்ளுங்கள்

Teenage வயதில் சில ஹார்மோன் சுரப்பதினால், சரீரத்தில் சில வளர்ச்சி ஏற்படுகிறது. லூட்டினைசிங் ஹார்மோன் (Lutinizing Harmone) உதவியால் பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் என்ற அமிலமும், ஆண்களுக்கு Testosterone என்ற அமிலமும் சுரப்பதால் நம் சிந்தைகளிலும், உணர்வுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

இப்படித்தான், உங்கள் சரீரம் மற்றும் ஹார்மோன்கள் செயல்பட வேண்டும் என்று தேவன் உங்களை சிருஷ்டித்துள்ளார். இந்த படைப்பின் வளர்ச்சி, செயல்பாடு எல்லாமே ஆண்டவருடைய படைப்பின் மேன்மையே!

அட இந்த ஈர்ப்பு ஹார்மோன்களால் செயல்பட்டால், அதுவும் இவை யாவும் தேவனின் செயலானால் அதை தவறு என்று ஏன் சொல்கிறீர்கள் என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது. இவையெல்லாம் உங்கள் ஆரோக்கியமான சரீர வளர்ச்சியின் அடையாளமாக இருந்தாலும், ஒவ்வொன்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் அனுபவிக்க வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாகும் (பிரசங்கி 3:1). 12 முதல் 21 வயது வரை இவற்றை அனுபவிக்கக்கூடிய வயதில்லை என்று மருத்துவ உலகமும், அரசாங்கமும் சொல்லிவிட்டது. மேலும் 85-95% டீன் ஏஜ் காதல் தவறான ஈர்ப்புகளால் ஈர்க்கப்பட்டு, எல்லை மீறி செல்கிறார்கள்; பல கற்பழிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 92-95% டீன் ஏஜ் காதல்கள் தோல்வியில் முடிந்திருக்கிறது. எப்படி போதை பொருட்கள் எடுத்துக்கொள்ளும்போது, சாராயம் குடிக்கும்போது ஹார்மோன் தூண்டப்பட்டு ஒருவித பரவசம் ஏற்படுகிறதோ, அவ்வாறே இப்படிப்பட்ட உணர்வுகளில் நீங்கள் அசைபோடும்போதும், ஆபாச படங்கள் பார்க்கும்போதும், ஒரு ஆணைப் பற்றியோ, ஒரு பெண்ணைப் பற்றியோ இந்த உணர்வோடு சிந்திக்கும்போதும் இதே பரவசப்படுத்தும் ஹார்மோன் தூண்டப்படுகிறது. போதைப் பொருட்கள் எடுப்பது தவறு என்றால் இப்படிப்பட்ட உணர்வுகளை தூண்டி விடக்கூடிய நினைவுகளை அசை போடுவதும் தவறுதானே.. சிந்திப்போம்...! அப்படிப்பட்ட தவறான உணர்வுகளை தேவன் ஏன் சிருஷ்டிக்க வேண்டும்? நம் சரீர வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களில் "இப்படிப்பட்ட மாற்றங்கள்" இல்லாமலே இருந்திருக்கலாமே! குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஏன் ஆட்ட வேண்டும்? என்றுதானே யோசிக்கிறீர்கள்? அதுவும் எனக்கு புரிகிறது, அதையும் சொல்கிறேன்!

இந்த பரவசப்படுத்தக்கூடிய உணர்வு, சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என்கின்ற தூண்டுதல், ஒருவிதமான ஈர்ப்பு இவைகளெல்லாம் 'ஒருவரோடு மட்டும்', ஏற்ற நேரத்தில் திருமணம் என்னும் உறவிற்குள் நீங்கள் இணைந்தவுடன், நீங்கள் அந்த நபரோடு (கணவன்/மனைவி) அனுபவிக்க வேண்டுமென்று தேவன் கொடுத்த அழகான பரிசு. இந்த பரிசை அதை உபயோகிக்க வேண்டிய காலத்திற்கு முன் பயன்படுத்தினால் அது சந்தோஷத்தையல்ல ஆபத்தையே ஏற்படுத்தும்.

காதல் என்னும் அழகான உறவு உங்கள் திருமணத்திற்கான அன்பான பரிசு. அந்த குறிப்பிட்ட காலத்திற்கு முன்



**அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால், அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது** (ரோமர் 13:10)



னால் அவசரப்படுவது, இச்சைக்கு இடம் கொடுப்பது, சுயநலமானதும் பாவமும் ஆகும். அதனால் உங்கள் வாழ்வை பகிர்ந்துகொள்ள போகிற அந்த நபரை கண்டுபிடித்து, திருமணத்தில் இணையும் வரை அந்த சரியான காலத்திற்கு காத்திருதுப்பது தேவையில்லாத பிரச்சனைகளுக்கு உங்களை விலக்கி காக்கும்.

இப்படி எல்லை மீறுவது தவறு என்று எனக்கு புரிகிறது. ஆனால் உணர்வை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே, பொறுத்திருக்கவும் முடியவில்லையே... என்ன செய்வது? என்று யோசிக்கிறீர்களா?

### உணர்வுகளை கையாளவும், உணர்வுகளை மேற்கொள்ளவும் சில ஆலோசனைகள்:

- இரவு 10 மணிக்குப் பிறகு மொபைல் போனை பயன்படுத்தாதீர்கள். You-tube செல்வது மற்றும் எதிர்பால ரோடு ஆபாசமான செய்திகள் அனுப்புவதை முற்றிலும் தவிர்த்து விடுங்கள்.
- கம்பியூட்டர், லேப்டாப், மொபைல் ஃபோன் இவற்றைப் பயன்படுத்து-வதற்கு முன்பு ஜெபியுங்கள். இந்த பொருட்களின் மூலமாக உங்கள் சிந்தையை கறைபடுத்த பிசாசிற்கு அதிகாரமில்லை என்று ஜெபித்து விட்டு பயன்படுத்துங்கள். உங்கள் அருகில் இயேசு இருக்கிறார், அவர் உங்களைப் பார்க்கும்போது இப்பட்டிப்பட்ட செயல்கள் தலைதூக்க விட மாட்டீர்கள் இல்லையா?

**கம்பியூட்டர், லேப்டாப், மொபைல் ஃபோன் இவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஜெபியுங்கள்.**

- கால அட்டவணை போட்டு செயல் படுங்கள். நேரத்தை வீணடித்துக் கொள்ளாதீர்கள் (சும்மா இருக்காதீர்கள்)? பலவிதமான தாலந்துகளை வளர்த்துக் கொள்ள நேரம் கொடுங்கள்.
- 'காதல் உணர்வுகளை' தட்டி எழுப்பக் கூடிய காட்சிகள், கதைகள் சொல்லும் நண்பர்களுக்கு விலகியிருங்கள்.
- உங்களுக்குப் பிடித்தமான காரியத்தில் (பைக் ஓட்டுவது, இசை கருவிகள் வாசிப்பது, பெயின்டிங், சமைப்பது, போட்டோகிராஃபி) போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள். இதன் மீதுள்ள கவனம் தானாக குறைந்துவிடும்.
- காதல் உணர்வுகள் வருவது இயல்பானது தான். ஐயோ! ஏன் இப்படி எனக்குள் நடக்கிறது? என்று பயப்படாதீர்கள். அப்படிப்பட்ட நினைவுகள் தலைதூக்கும்போதே, உங்களை திசைதிருப்பிக் கொள்ளுங்கள். உங்கள் கவனத்தை வேறு காரியங்களில் ஈடுபடச் செய்யுங்கள். இந்த உணர்வை மேற்கொள்ள இயேசுவின் பெலன்கேட்டு ஜெபியுங்கள். சில நிமிடங்களில் இப்படிப்பட்ட உணர்வுகள் உங்களைவிட்டு ஓடிவிடும்.
- ஆவியானவரின் துணையை நாடுங்கள், எங்கு சென்றாலும், எதை செய்தாலும் பரிசுத்த ஆவியானவரிடம் ஆலோசனை கேட்டு செயல்படுங்கள்.
- வசனத்தை வாசித்து அறிக்கையிடுங்கள் சத்தமாக வேதத்தை வாசியுங்கள்.
- பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள்: இப்படிப்பட்ட உணர்வுகள் வரும் போது, "நான் தேவனுடைய பிள்ளை; அவருடைய சிந்தையால் நிரப்பப்பட்டிருக்கிறேன்; பிசாசிற்கு என்மீது அதிகாரமில்லை" என்று சத்தமிட்டு சொல்லுங்கள்.

**உணர்வுகளை உருவாக்கிய தேவன் உங்களோடு இருக்கிறார். உங்கள் பெலவீனத்தில் அவருடைய பெலன் விளங்கும். எனவே, அவரிடம் உதவி கேளுங்க! அப்புறம் பாருங்க! நீங்கள் சூப்பரா எதிர்த்து நிற்பீங்க!!** ●

உணர்வுகள் தொடரும்...

**உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்** (ரோமர் 12:9)

# உண்மையான அன்பு



## லாசரு

எருசலேமிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் பெத்தானியா என்ற சிறிய கிராமம் இருந்தது (யோவான் 11:18). இயேசு மரிப்பதற்கு சில வாரங்களுக்கு முன் அங்கு ஒரு துயர சம்பவம் நடந்தது. இயேசுவின் நெருங்கிய நண்பனான லாசரு திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். லாசருவை அடக்கம் செய்து நான்கு நாட்களுக்குப் பிறகுதான் இயேசு பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்தார். அந்த இடத்தில் அவர்கள் அழுகிறதை இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கி, துயர மடைந்து லாசருவை எங்கே வைத்தீர்கள் என்றார். அந்த நேரத்தில் இயேசு சிறிய ஜெபம் ஏறெடுத்து அங்கு சூழ்ந்திருக்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படி யாக லாசருவை உயிரோடு எழுப்பினார். இயேசு லாசரு மேல், அவர் குடும்பத்தின்மேல் வைத்திருந்த உண்மையான அன்பை கண்டு மற்றவர்கள் தேவனை விசுவாசிக்கும்படியாக அந்த அன்பை வெளிப்படுத்தி னார். அதினிமித்தம் அநேகர் அவரிடம் விசுவாச முள்ளவர்களானார்கள் (யோவான் 11:19-45).

வாலிபர்களே! நாம் காண்பிக்கும் அன்பு மற்றவர்களை தேவனிடம் நெருங்கிச் சேர்க்கிற அன்பாக வெளிப்பட வேண்டும். அதுவே தேவனுடைய நாமத்திற்கு மகிமையை கொண்டு வந்து சேர்க்கும். மாயமற்ற அன்பை வெளிப்படுத்தி, மற்றவர்கள் இயேசுவிடம் நெருங்க முயற்சி செய்வோம்!

இவர் கலிலேயா நாட்டைச் சேர்ந்தவர். இயேசுவின் சீடர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். இயேசு பாடுபட்டு மரித்து, உயிர்த்தெழும்-வரை மரியாள் அவரோடு இருந்தார். உயிர்த்த இயேசுவை முதன்முதலில் நேரில் தரிசித்தவர். இவரிடமிருந்துதான் இயேசு ஏழு பேய்களை ஓட்டினார் (லூக்கா 8:2; மாற்.16:9). தான் செய்த பாவங்களின் பரிகாரமாய் ஆண்டவரின் பாதங்களைக் கழுவினார். இறந்து அடக்கம் செய்யப்பட்ட ஆண்டவரின் கல்லறை வெறுமனே இருப்பதை முதன்முதலில் பார்த்து இயேசுவின் சீடர்களிடம் அறிவித்தவர். மரியாளின் ஒவ்வொரு செயலிலும் அவர் இயேசுவின்மேல் உண்மையான அன்பு வைத்திருந்தார் என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. இயேசுவைப் பற்றிக் கொள்வதில் அனைவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் அன்றிலிருந்து இன்றுவரை திகழ்கிறார்.

இதை வாசிக்கும் வாலிபர்களே! பாவமான இன்ப சுகங்களை நேசித்த இவர், மனம் திரும்பியபின், இயேசுவை உண்மையாக நேசித்து ஆர்வத்துடன் பின்பற்றினார். நாமும் பாவிகளாயிருந்து மனம் திரும்பியிருக்கிறோம். மகதலேனா மரியாள் போல் இயேசுவின்மேல் உண்மையான அன்பை செலுத்தி, அவரை பின்பற்றுவோம்!!

## மகதலேனா மரியாள்



# மாய்மாலமான அன்பு



## யூதாஸ் காரியோத்து

இயேசு கிறிஸ்துவிற்கு இருந்த 12 சீடர்களில் ஒருவர் யூதாஸ் காரியோத்து. இவர் அலெக்சந் திரியா பட்டணத்தைச் சேர்ந்தவராக இருந்தார். யூதாஸ் ஏழைகளுக்கு உதவும் மனநிலை மற்றும் எதையும் வீணாக்கக் கூடாது என்ற நல்ல பண்பையும் கொண்டிருந்தார் என்று வேதம் (மத்.26:8,9; யோவான் 12:5) கூறுகிறது. மேலும் இயேசுவின் சீடர்களில் யூதாஸ் காசாளராக நியமிக்கப்பட்டிருந்தார். மாயமான அன்பு நிறைந்த யூதாஸ் 3 ஆண்டுகளுக்கு மேலாக இயேசுவின் சீஷராக இருந்தும் பண ஆசை உடையவராய் இருந்ததால், இயேசுவை காட்டிக் கொடுத்தார். இறுதியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வாலிபர்களே! யூதாசிடம் இருந்ததுபோல, நம்மிடம் நிறைய நற்பண்புகள் இருக்கலாம். ஆனால் பல வாழ்க்கை சூழ்நிலைகளினால் நம்முடைய மாயமான அன்பை வெளிப்படுத்தி இயேசுவை காட்டிக் கொடுத்து விடுகிறோம். இயேசுவின் மேல் நமக்கு மாயமற்ற அன்பு இருந்தால் நமக்கு உலக ஆசை வராமல் தேவன் நம்மை காத்துக் கொள்வார். இல்லையென்றால் யூதாஸின் நிலைமை முடிவில் ஏற்படும். சிந்திப்போம்! நம்மை சீர்படுத்துவோம்! இயேசுவின் மேல் உண்மையான அன்பு கொள்வோம்!

இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் கையிலிருந்து இரட்சிப்பதற்காக சிம்சோன் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவனாகவும், கர்த்தருடைய ஆவியான வரின் வழிநடத்துதலை பெற்றவனாகவும், கர்த்த ருடைய ஆவி தன்மேல் இறங்குவதினால் அசாதாரண வல்லமையுடைய பெலசாலியாகவும் இருந்தான். கர்த்தர் நியமித்த திட்டத்தை நிறைவேற்றுபவனாக இருந்தான். அதனால் தான் பலத்தினால் எதிரிகளின் கட்டுகளை அறுக்க முடிந்தது. காலம் கடந்தது, சிம்சோன் தெலீலாள் என்னும் வேசியினிடத்தில் சென்றான் (நியா.16:1). தேவ ஆவியின் பெலத்தினால் எதிரிகளின் கட்டுகளை அறுத்து வந்தார் சிம்சோன். நியாயாதிபதிகள் 16:1க்கு பின்வரும் ஒரு இடத்தில் கூட கர்த்தருடைய ஆவியானவர் பலமாய் இறங்கினார் என்று பார்க்க முடியவில்லை. மாறாக கர்த்தர் அவனைவிட்டு விலகினார் என்று தான் பார்க்க முடிகிறது (நியா.16:20). மாயமான அன்பு மற்றும் பாவத்தின் வல்லமை அவனை ஆட்கொண்டதினால் பார்வையை இழந்து வேடிக்கை பொருளாக மாறினான். 3000 பெலிஸ்தரோடு கூட தானும் மரித்துபோனான்.

அன்பான வாலிபர்களே! மாயமான அன்பைத் தேடி சென்ற சிம்சோன் தேவ திட்டத்தை நிறைவேற்றா தவனாய் மரித்துப் போனான். நம்முடைய பாவம் நம்மை நரகத்திற்கு நேராய் கொண்டு செல்லும். எனவே ஒரே வழி என்னவெனில் நம் சிந்தையை பரிசுத்த ஆவியான வரின் துணையோடு வைத்துக் கொள்வதுதான். மாயமான அன்பை விட்டு விலகி, நம்மேல் உண்மையான அன்பு வைத்து தன் ஜீவனையும் கொடுத்த இயேசுவின் வழியில் நடப்போம்! தேவ திட்டத்தை நிறை வேற்றுவோம்!

## சிம்சோன்



செய்தி
மோகன் சி. லாசரஸ்



# ஏன் அழுகிறாய்?



இயேசுவின் மார்பில் சாய்ந்திருக்கக்கூடிய அளவுக்கு, அவரோடு நெருக்கமாயிருந்த யோவான், "இயேசு, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"! என்ற வெளிப்பாடு பெற்றவராகிய பேதுரு, "உம்மோடு மரிக்கவும் ஆயத்தம்!" என்று சொன்ன சீஷர்கள், இயேசுவை தன் கருவில் சுமந்து பெற்றெடுத்த கன்னி மரியாள் என்று, இப்படி விசேஷமானவர்கள் பலர் இருந்தபோதிலும், யாருக்கும் முதன்முதலாக இயேசு தரிசனமாகாமல், மகதலேனா மரியாளுக்கு இயேசு தரிசனமாகக் காரணம் என்ன?

## நன்றியுள்ளவள்!

கலிலேயாக் கடற்கரையில் 'மக்தெலா' என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம்தான் மரியாளின் ஊர். அந்த ஊரை வைத்துத்தான் அவளுக்கு, "மகதலேனா மரியாள்" என்ற பெயர் வந்தது. இன்றும் அந்த ஊர், அதே பெயரில்தான் இருக்கிறது. ஏழு பிசாசுகளினால் அவள் பாதிக்கப்பட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். இயேசு அந்தப் பிசாசுகளைத் துரத்தி, அவளுக்கு விடுதலை கொடுத்தார் (மாற்கு 16:10). ஆகவே, அவளுக்கு இயேசுவின் மீது அதிகமான அன்பு, இயேசுவை தன் சொந்தத் தகப்பனைப்போல அவள் நேசித்தாள். "அசுத்த ஆவிகளினால் இருண்டு கிடந்த என் வாழ்க்கையில், வெளிச்சத்தைக் கொடுத்தாரே!" என்கிற பாசம், இயேசுவின் மீது அவளுக்கு இருந்தது. ஆண்டவர் இயேசு, தனக்குச் செய்த நன்மையை அவள் மறக்கவில்லை! "அவள் இயேசுவுக்கு ஊழியத்தில் உதவியாயிருந்தாள்" என்று வேத வசனம் சொல்கிறது (லூக்கா 8:1-3).

இயேசுவினிடத்தில் நன்மைகளைப் பெற்ற சிலர், நன்றி நிறைந்த உள்ளத்தோடு இயேசுவுக்கு ஊழியத்தில் உதவியாயிருந்தார்கள். மகதலேனா மரியாளும் இயேசுவுக்கு நன்றியுள்ளவளாயிருந்தாள். ஆகவேதான், உயிர்த்தெழுந்த இயேசு முதன்முதலாக அவளுக்கு தரிசனமானார்!

"கடைசி நாட்களில் மனுஷர் நன்றியறியாதவர்களாயிருப்பார்கள்" என்று வேத வசனம் சொல்கிறது (2 தீமோ.3:2,2). நம்மிடத்தில் நன்மை பெற்ற மக்களே, நன்றியில்லாமல் நமக்கு விரோதமாகச் செயல்படும்போது, நம் உள்ளம் ஆச்சரியப்படுகிறதல்லவா? கடைசிக் காலத்தில் மனுஷர் இப்படித்தான் இருப்பார்கள்! நன்றியில்லாத மக்கள், எல்லாக்

இயேசு மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த பிறகு, அநேகருக்கு தரிசனமானார்! 'பேதுருவுக்கு' தன்னுடைய 'சீஷர்களுக்கு' என்று சுமார் ஐநூறு பேருக்கும் அதிகமான சகோதரர்களுக்கு இயேசு தரிசனமானார்! இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாக எழும்பி, கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்திய சவுலுக்கும் இயேசு தரிசனமாகி, தன்னை வெளிப்படுத்தினார்! இயேசு ஏராளமானோருக்குத் தரிசனமானபோதும், அவர் உயிர்த்தெழுந்தவுடன் முதன்முதலாக, 'மகதலேனா மரியாள்' என்ற ஒரு பெண்ணுக்குத்தான் தரிசனமானார்! அது எவ்வளவு பெரிய பாக்கியம்?

காலங்களிலும் இருந்தார்கள்.

தேவப் பிள்ளைகளாகிய நாம், நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆண்டவர் நமக்குச் செய்த நன்மைகளை மறந்து விடக் கூடாது. ஒரு சின்னக் காரியத்தில் தோல்வியோ, ஏமாற்றமோ வந்துவிட்டால், ஆண்டவர் செய்த ஏராளமான நன்மைகளை மறந்து, அவரை முறுமுறுக்கிறவர்கள் எத்தனை பேர்?

இன்றைக்கும் ஓய்வில்லாமல் தேவனுடைய ஊழியத்தில் நான் ஓடிக்கொண்டிருக்கிறபடியி னால் என்னை நேசிக்கிற சில தேவப் பிள்ளை கள், என்னை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி யாக, என்னிடத்தில் அன்போடு ஆலோசனை சொல்வதுண்டு. ஆனால், இயேசு கிறிஸ்து எனக்கு செய்த அற்புதங்களை நான் நினைத்துப் பார்க்கும்போது, நான் செய்கிற ஊழியம் ஒன்றுமேயில்லை! இயேசு, என் மரணப் படுக்கையில் எனக்கு அற்புதம் செய் யாமல் இருந்திருந்தால், இன்றைக்கு என் கல்ல றைதான் இந்த உலகத்தில் இருந்திருக்கும்! நான் சாகாமல் உயிரோடு இருப்பதே, இயேசு எனக்குக் கொடுத்த பிச்சைதான்! ஆகவேதான், அவருக்காக இரவும் பகலும் ஓய்வில்லாமல் ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன்.

பிரியமானவர்களே, மகதலேனா மரியாளைப் போல நன்றி உள்ளவர்களாயிருங்கள். ஆண்ட வர் உங்களுக்கும் தரிசனமாவார்!

## அன்புள்ளவள்!

மகதலேனா மரியாளை பிசாசின் பிடியி லிருந்து இயேசு விடுவித்தபடியினால், அவள், இயேசுவை தன் தகப்பனைப்போல அதிக மாக நேசித்தாள். ஆகவேதான், அவருடைய ஊழியத்தில் இயேசுவுக்கு அவள் மிகவும் உதவியாயிருந்தாள் (லூக்கா 8:1-3). அதுமாத் திரமல்ல, இயேசு சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்கப்பட்டபோது, சீஷர்கள்கூட பயந்துபோய், ஓடி ஒளிந்து கொண்டார்கள்! ஆனால், இந்த மகதலேனா மரியாளோ, இயேசுவின் சிலுவையின் அருகில் மிகுந்த கண்ணீரோடும், துக்கத்தோடும் நின்று கொண்டிருந்தாள்!

**மகதலேனா மரியாள் இயேசுவை தன் தகப்பனைப்போல அதிகமாக நேசித்தாள்**

"இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்" (யோவான் 19:25). இயேசு கிறிஸ்துவினிடத்தில் சுகத்தை, விடுத லையை, அற்புதங்களைப் பெற்றவர்கள்கூட, அவர் காட்டிக் கொடுக் கப்பட்டு, பாடுபட்டு, சிலுவையில் அறையப்படும்போது, பயந்து, ஒளிந்து கொண்டார்கள்! ஆனால், மகதலேனா மரியாளோ, தைரியமாக சிலுவை யினருகில் நின்றாள். காரணம் என்ன? இயேசுவின் மீது அவள் வைத்திருந்த அன்பு!

இயேசுவைக் கல்லறையில் அடக்கம் பண்ணியபோது, "...மகதலேனா மரி யாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்" (மத்தேயு 27:61).

பாருங்கள், இயேசுவின் கல்லறையின் அருகிலும், மகதலேனா மரியா ளைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு அவள் இயேசுவின் மீது அன்பு வைத் திருந்தாள். யூதர்களுடைய வழக்கத்தின்படி, மலையைக் குடைந்து உண்டாக்கப்பட்ட கல்லறையில் இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டது. அடக்கம் பண்ணப்பட்ட சரீரத்தை சில நாட்கள் வரைக்கும் வாசனைத் திரவியங்களைப் பூசி, அதைப் பராமரிப்பது யூதர்களுடைய வழக்கம். அதன்படி, வாரத்தின் முதல் நாள் இயேசுவின் சரீரத் திற்கு வாசனைத் திரவியங்களைப் பூசி, மரியாதை செய்ய மகதலேனா மரியாள் வந்தாள்.



"வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரி யாள் கல்லறையினிடத்திற்கு..." (யோவான் 20:1) என்று வேதாகமம் சொல்கிறது. இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட, இயேசுவோடுகூட இருந்த சீஷர்கள்கூட இயேசு வின் கல்லறையைத் தேடி வர வில்லை. ஆனால் மகதலேனா மரியாளோ, 'எப்பொழுது விடியும்' என்று காத்திருந்து, காலையில், அதிக இருட்டோடே, மரித்துப்போன இயேசுவின் சரீரத்தைப் பார்க்க கல் லறைக்கு வந்தாள். இயேசுவோ, தான் உயிரோடிருக்கிறவராக அவளுக்குத் தரிசனமானார்! நமக்கு தாயாக, நல்ல தொரு தகப்பனாக, நம் மீது பாசம் காட்டுகிற இயேசுவை, நம் உள்ளம் இப்படித் தேடுகிறதா?

"...அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி.8:17) என்று ஆண்டவர் வாக்குக் கொடுத்தி

ருக்கிறார். அதிகாலையில் இருட்டோடே எழுந்து கர்த்தரைத் தேடுங்கள்.

## தேடினவள்!

"இயேசு மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவார்!" என்பது மகதலேனா மரியாளுக்குத் தெரியாது. அவருடைய சரீரத்திற்கு வாசனைத் திரவியங்களைப் பூசி, மரியாதை செய்யத் தான் அவள் வந்தாள் (மாற்கு 16:1). இயேசுவின் சரீரத்தை அங்கே அவள் காணாதபடியினால், "யாரோ இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்" என்று நினைத்தாள். உடனே அவள் சீஷர்களிடத்தில் ஓடி, செய்தியை அறிவித்தாள்.

பேதுருவும், யோவானும் கல்லறைக்கு வந்து பார்த்தார்கள். இயேசுவின் சரீரம் அங்கே இல்லை. "நாம் என்ன செய்ய முடியும்?" என்பதைப்போல, அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள். ஆனால், 'மரியாளோ கல் லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்' என்று வேதம் சொல்கிறது (யோவான் 20:11).

இயேசுவோடுகூட இருந்த சீஷர்கள்கூட, "இயேசுவின் சரீரத்திற்கு என்ன ஆயிற்று?" என்று கவலைப்படாமல் திரும்பிப் போய்விட்டார்கள். ஆனால் மகதலேனா மரியாளோ, அவருடைய சரீரத்தை மிகுந்த கண்ணீரோடு தேடினாள். இரண்டு தேவதூதர்கள், அவளோடு பேசினார்கள் (யோவான் 20:12,13). அதைக்கூட அவள் பெரிதாக நினைக்க வில்லை. அவள் கண்ணீரோடு இயேசுவைத் தேடினாள். ஆகவேதான், இயேசு கிறிஸ்து முதன் முதலாக அவளுக்குத் தரிசனமா னார்.



"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என் னைத் தேடுகையில் கண்டுபிடிப் பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த் தர் சொல்லுகிறார்" (எரேமியா 29:13,14).

உயிர்த்தெழுந்த இயேசு, மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானபோது, இயேசுவை அவளுக்கு அடையாளம் தெரியவில்லை. அவரை தோட்டக் காரர் போலும்.. என்று எண்ணிக் கொண்டாள் (யோவான் 20:15). காரணம் இயேசுவின் கல்லறை இருந்த இடத்தில், ஒரு தோட்டம் இருந்தது (யோவான் 19:41). ஆகவே, "இவர் அந்தத் தோட்டத்தைப் பராமரிக்கிற தோட்டக்காரர்" என்பதாக நினைத்தாள்.

**இயேசு மரணத்தை ஜெயித்து, உயிர்த்தெழுந்தபோது, மகிமையின் சரீரத்தோடு எழுந்தார்.**

இயேசு மரணத்தை ஜெயித்து, உயிர்த்தெழுந்தபோது, மகிமையின் சரீரத்தோடு எழுந்தார். இயேசுவை மகதலேனா மரியாள் கடைசியாக, சிலுவையில் காயப்பட்டு, அழகற்று, இரத்த வெள்ளத்தில் தோய்க்கப்பட்ட அவருடைய சரீரத்தைத் தான் பார்த்தாள். ஆகவே இப்பொழுது மகிமையின் சரீரத்தோடு இயேசு அவளுக்கு முன்பாக நின்றபோது, அவளுக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. இயேசு அவளை நோக்கி, "மரியாளே..." என்றார். "என்னை இப்படிப் பாசத்தோடு, அன்போடு பெயர் சொல்லி அழைப்பது, என் தகப்பன் இயேசுவல்லவா?" என்பதை அவள் உணர்ந்து கொண்டபோது, இயேசுவை அவள் அடையாளம் கண்டுகொண்டாள்.

எவ்வளவாய் அவளுடைய உள்ளம் மகிழ்ந்திருக்கும்? "உயிரற்ற சரீரத்தைக் காண வந்தேன். என் தகப்பனோ, உயிரோடு என் முன் நிற்கிறாரே! பாசத்தோடு என்னைப் பெயர் சொல்லி அழைக்கிறாரே!" என்று, ஆனந்தக் கண்ணீர் வடித்திருப்பாள் அல்லவா? உயிர்த்தெழுந்த இயேசு, மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானபோது, "...ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார்" (யோவான் 20:15). காரணம், அவளுடைய கண்ணீர், இயேசுவின் உள்ளத்தை அசைத்தது! ஆகவேதான், உயிர்த்தெழுந்த இயேசு, முதன் முதல் மகதலேனா மரியாளுக்குத் தரிசனமாகி, அவளுடைய கண்ணீரைத் துடைத்தார். அவளுடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார்.

**இதே இயேசு, இப்பொழுது உங்களருகில் நின்று கொண்டிருக்கிறார். அவர், உங்களைப் பார்த்து: "ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்கிறார். உங்கள் அழுகைக்குக் காரணம் எதுவாயிருந்தாலும், இயேசு அதை மாற்றுவார். உங்கள் கண்ணீரைத் துடைக்க, இன்றைக்கு ஒரு அற்புதம் செய்வார்!** ●

# ஈசாக்கு

ஈசாக்கு என்ற பெயருக்கு “நகைப்பு” என்று பொருளாகும். வயதான பெற்றோருக்கு பிறந்த செல்லப் பிள்ளையாய் இருந்தாலும் தந்தையின் விருப்பத்திற் கேற்ப தன்னை பலியிட ஒப்புக் கொடுத்தவர் தான் ஈசாக்கு. இது இயேசு தம்மை பலியாக கொடுத்தற்கு முன் உள்ள அடையாளமாகும். பல பெண்களை திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் நிறைந்த காலத்தில் ஒரே மனைவியுடன் ஒழுக்கமாக வாழ்ந்த உத்தமர் ஆவார்.

## அறிமுகம்

**இடம்: கானான்**

**பெற்றோர்: ஆபிரகாம்-சாராள்**

**மனைவி: ரெபேக்காள்**

**மகன்கள்: ஏசா, யாக்கோபு**

## நற்பண்புகள்

**தந்தைக்கு தன் உயிரை கொடுக்கும் அளவிற்குத் கீழ்ப்படிந்தவர்.**

**தியானம் செய்ததாக வேதம் கூறும் முதல் நபர் இவரே ஆகும்.**

**ஒரே மனைவியுடன் வாழ்ந்தவர்.**

**தெய்வ பகத்தியும் விசுவாசமும் உள்ளவர்.**

**தனது மனைவிக்காக ஜெபம் செய்தவர்.**

**தனக்கு தீங்கு செய்தவர்கள் தன்னிடம் வந்தபோது சமாதானம் செய்து கொண்டவர்.**

**பரம தேசத்தை விரும்பியதால் கானான் நாட்டில் நகரத்தையோ வீட்டையோ கட்டவில்லை.**

## பெலவீனங்கள்

உயிருக்குப் பயந்து தன் மனைவியையே தன் சகோதரி என்று சொன்னார்.









வேதாகமத்தில் நேர்மையாக, உத்தமமாக நடந்த நபர்களில் ஒருவர் ஈசாக்கு. தேவனுக்கு உண்மையும், கீழ்ப்படிதலுமுள்ள மகனாக வாழ்ந்து தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். நாமும் ஈசாக்கைப் போல வாழ்ந்து தேவ ஆசீர்வாதம் பெறுவோம்!

## மேலும் அறிய...

ஆதி.17:15-18;15; 21:1-28;9:35;28-29; ரோமர் 9:7-13; கலா.4:21-31; எபி.11:17-20; இராஜா.2:21-24

ஜிஷ்யா



# நிலையில்லா அன்பு

**பிப்ரவரி மாதம் என்றாலே நம் நினைவிற்கு வருவது, "காதலர் தினம்" தான். ஒரு மாதத்திற்கு முன்பே ஆன்லைனை ஷாப்பிங்கில் விசேஷ தள்ளுபடி விற்பனை துவங்கி விடும். இருவராக வந்து சாப்பிடுங்கள், ஒருவருக்கு பில் கட்டினால் போதும் போன்ற வாசகங்களை பார்க்க துவங்கி விடுவோம். Beach, Maal என்று நண்பர்கள் தங்கள் காதலர்களை அழைத்து செல்ல திட்டமிடுவதையும் பார்க்கிறோம். இப்படிப் பட்ட ஈர்ப்புகளால், ஆசைப்பட்டு காதல் என்னும் வலையில் விழுந்த ரீட்டா பிரியாவின் கதை இதோ உங்களுக்காக...**

பிரியா கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்ந்தவள். பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை பரிசுத்தமாக தன்னை காத்துக் கொண்டாள். கல்லூரி வாழ்க்கை துவங்கியது. முதல் வருடம் சந்தோஷமாக சென்றது. பல புதிய அனுபவங்களும் நண்பர்களும் கிடைத்தனர். இரண்டாம் ஆண்டில் தான் ரோஹித்தை சந்தித்தாள். அவனும் சபைக்கு செல்பவன். நன்றாக இசை கருவிகள் வாசிக்கிறான், அன்பாக பேசுகிறான். கரிசனையாய் இருக்கிறான். இப்படி ரோஹித்தை பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். நண்பர்களாய் ஆரம்பித்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது. இருவரும் ஒரே பைக்கில் செல்வதும், செல்ஃபிக்கள் எடுப்பதும், பார்க், பீச் போன்ற இடங்களில் சந்திப்பதும், இரவு நேரங்களில் வாட்ஸ்அப் சாட்டில் பல காரியங்களை பகிர்ந்து கொள்வதுமாக அவர்களுக்குள் நெருக்கம் அதிகமானது.

காதல் வாழ்க்கையை சில ஆண்டுகள் அனுபவித்தனர். பிரியா அவளுடைய பணத்தை நேரத்தை, ஆற்றலை அவள் முழு சிந்தையை, உணர்ச்சிகளை, சொல்லப்போனால் அவளையே (ரோஹித் தான் தன்னுடைய வாழ்க்கை என்று எண்ணி அனைத்தையும்) அவனுக்காக செலவு செய்தாள். ரோஹித்தின் இருதயம் பிரியாவின் இருதயமாக மாறியது. ரோஹித்தின் ஆசைகள், கனவுகள் பிரியாவின் கனவாக மாறியது. இப்படி இருதயமும், உணர்வுகளும் பரிமாறப்பட்ட நிலையில் "திருமணம்" என்னும் அழகான உறவிற்குள் செல்லும் கனவில், மனக்கோட்டை கட்டி, ரோஹித்திடம் இதைப் பற்றி பேச துவங்கினாள்.

ஆரம்பத்தில் இந்த பேச்சை தவிர்த்த ரோஹித், பின்னர் பிரியாவிடம் தன் நிலையை சொன்னான். "ஆமா! எனக்கு அப்போ உன்னை பிடித்தது; ஆனால் உன்னைபோலவே பல நண்பர்கள் எனக்கு இருக்கிறார்கள் எல்லோரையும் நேசிக்கிறேன்; எல்லோரும் எனக்கு வேண்டும்; நீயே, காதல் கல்யாணம் போன்ற மனக்கோட்டை கட்டிக் கொண்டால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று கோபமாக கத்திவிட்டு செயரை தள்ளிவிட்டு பைக்கில் விரைந்தான். "ரோஹித்! ரோஹித்! ப்ளீஸ்" என்று கதறி கூச்சலிட்டும் பதில் இல்லை. ஃபோன் செய்து பார்த்தாள், சுவிட் ஃஆப் செய்யப்பட்டிருந்தது. வாட்ஸ்அப்பில் ரோஹித், பிரியாவை





Block செய்துவிட்டான். பிரியாவால் இந்த அதிர்ச்சியை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. “என் உயிரைவிட அதிகமாக நேசித்தேனே! காதலிக்கிறேன் என்று சொல்லி என்னை ஏமாற்றிவிட்டானே! நம்பிக்கை துரோகம் செய்துவிட்டானே!” என்று தனக்குள்ளேயே பேசி அழுது கொண்டிருந்தாள். நாட்கள் மாதங்களாக உருண்டோடியது. பிரியா உடைந்து போனவளாய் இருதயம் நொறுக்கப்பட்டவளாய் வாழவே விருப்பமில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

சில மாதங்கள் கழித்து, பிரியாவின் தோழி அவளுடைய சபைக்கு அழைத்து சென்றாள். நம்பிக்கையற்ற நிலையில் கலங்கி நின்ற பிரியாவிடம் அந்த செய்தியின் மூலமாய் தேவன் பேச துவங்கினார். ஆம்! அந்த போதகர், “தேவனுடைய அன்பை” பற்றிப் பேசினார். பிரியாவின் இருதயத்தை தொட்டு அவளுக்குள் நம்பிக்கையை கொடுத்த அந்த போதகரின் செய்தியின் தொகுப்பு இதோ உங்களுக்காக...

## நொறுக்கப்பட்ட உங்கள் இருதயத்தை தேவனால் மாற்ற முடியுமா?

**நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து, உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து, உங்கள் சுய தேசத்திற்கு உங்களைக் கொண்டு வருவேன். அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்** (எசே. 36:24-27)



**பிதாவாகிய தேவனின் அன்பு மாறாதது! தாயைவிட அதிகமாக நேசிக்கும் அவருடைய அன்பு,**

பிரியமானவர்களே! எருசலேம் அதாவது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், அவருடைய வார்த்தையை கேட்காமல், கட்டளைகளை விட்டு விலகி, தேவனை கோபப்படுத்தினார்கள். அவர்களுடைய இருதயம் கல்லானது. பாவத்தினால், கட்டப்பட்ட நிலையில் இருந்த இஸ்ரவேலர்களின் இருதயத்தின் பாரத்தினால் தேவன் அவர்களுடைய இருதயத்தை தன் இருதயமாக மாற்ற நினைத்தார். இருதய பரிமாற்றம், ஆம் கல்லான, காயமான, பாரமான, உடைந்து போன இருதயத்தை எடுத்து அவருடைய அன்பான சதையான இருதயமாக மாற்ற விரும்புகிறார். இந்த இருதய பரிமாற்றத்திற்கு நீங்கள் ஆயத்தமா? எப்படிப்பட்ட மோசமான நிலையில் இருந்தாலும் சரி, அதை புதிதாக்க விரும்புகிறார். சரி! “உண்மையாய் நேசிக்கிறேன் என்று சொன்னவர்களே, இருதயத்தை உடைத்து, நம்மை நொறுக்கி விட்டார்கள். அப்படியிருக்க, தேவனைப் பற்றி அறிந்தும், அவருக்கு கீழ்ப்படியாமல், என் சொந்த விருப்பத்தின்படி வாழ்ந்து, அவரை கோபப்படுத்தி, அவருடைய இருதயத்தை வேதனைப்படுத்திய என்னைப் போன்றவர்களை அவரால் எப்படி நேசிக்க முடியும்? ஏற்கனவே உடைந்த இருதயத்தோடு இருக்கிறேன். இதுல இவரும் என்னைக் கைவிடமாட்டார் என்று எப்படி நம்புவது” என்று யோசிக்கிறீர்களா? மனிதர்களின் அன்பு கால சூழ்



நிலைக்கேற்ப மாறக்கூடியது; தேவைக் கேற்ப மாறக்கூடியது. ஆனால் நம் பிதா வாகிய தேவனின் அன்பு மாறாதது! தாயைவிட அதிகமாக நேசிக்கும் அவ ருடைய அன்பைப் பற்றி பார்க்கலாம்.

## தாய் உள்ளம் கொண்ட தகப்பனின் அன்பு

(ஏசாயா 66:13)

**ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்று வேன்; நீங்கள் எருசலேமிலே தேற் றப்படுவீர்கள்.** தாயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளையை மறந்தாலும், நான் உன்னை மறக்கமாட்டேன் (ஏசாயா 49:15,16). ஒருபோதும் உங் களை மறவாத, உங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் சுயநல மற்ற அன்பு.

## ஆதிமுதல் நேசித்த அன்பு

(1 யோவான் 4:19)

நீங்கள் விடுதலையாய் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காக பிதா வாகிய தேவன் உங்களை நேசித்து தியாகமாய் அவருடைய செல்ல பிள் ளையை கொடுத்தார். இன்னமும் இந்த அன்பை சந்தேகப்படுகிறீர்களா?

## உண்மையான அன்பு (சங்.141:6)

தாயின் கருவில் 10 மாதம் உங்களை தாங்கின அன்பு, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறதே தவிர அது ஒருபோதும் குறையாது. உங்கள் நிலையை பார்த்து உங்களை வெறுக்கமாட்டார். மனதார இறுதிவரை உங்களை ஏந்தி, சுமப்பார். அவர் உங்கள் வாழ்க்கையில் சொன்னதை நிறைவேற்றும் வரை உங்களை விட்டு விலகவும் மாட்டார், கைவிடவும் மாட்டார்.

## பாதுகாக்கும் அன்பு

(சங்.121:4; 91:3,4)

பிறந்த குழந்தை தூங்கும்போது கூட, விழித்திருந்து அக்குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் தாயைவிட அதிகமாக நம் பிதாவாகிய தேவன்



> **தாயின் கருவில் 10 மாதம் உங்களை தாங்கின அன்பு, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறதே தவிர அது ஒருபோதும் குறையாது.**

ஒவ்வொரு விநாடியும் உறங்காமல், தூங்காமல், நம் கால் இடறாமல் நம்மைப் பாதுகாத்து வருகிறார்.

## மன்னித்து ஏற்றுக்கொள்ளும் அன்பு

இளைய குமாரன் தகப்பனை விட்டு வழிவிலகி, தூரமாய் போனபோதும், ஒவ்வொரு நாளும் தன் மகன் திரும்பி வரமாட்டானா என்று ஏங்கிக் கொண் டிருந்த அன்பு. அதே அன்போடு உங்க ளையும் மன்னித்து, தன் பிள்ளையாக, நெருங்கிய நண்பராக ஏற்றுக் கொள்ள அவர் ஆயத்தமாய் இருக்கிறார். உடைந்த உங்கள் இருதயத்தை அவரி டம் கொடுக்க நீங்கள் ஆயத்தமா?

இந்த பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டி ருந்த பிரியாவின் கண்களில் கண்ணீர் கொட்டியது. மறுபடியும் அவருடைய இருதயத்தை புதிதாக்க வேண்டு மென்று இயேசுவிடம் அர்ப்பணித்தாள். நாளடைவில் பிரியாவின் வாழ்க்கை மாறத் துவங்கியது; இயேசுவை அதி கமாக நேசிக்க துவங்கினாள்; ஏமாற் றங்கள், துரோகங்கள், பழைய மோச மான நினைவுகள் மறைந்து, புதிய வாழ்க்கை அவள் நினைத்ததைவிட சந்தோஷமான வாழ்க்கையாக மலர்ந் தது.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் பிரியமானவர்களே! நீங்கள் எப்படிப் பட்ட உடைந்துபோன நிலையில் இருந் தாலும், நீங்கள் 100% நம்பத்தக்கவர் இயேசு ஒருவரே! அவர் ஒருபோதும் உங்களை ஏமாற்றமாட்டார்; கைவிடவும் மாட்டார்; உங்கள் இருதயத்தை அவர் இருதயத்தோடு மாற்றிக் கொள்வீர் களா?

நேசித்த உறவுகள் நினைத்து பார்க்காத வேளையில், நினைத்து பார்க்காத உறவாக வந்தவர் - இயேசு..! அவரை மிஸ் பண்ணிடாதீர்கள்! ●



சிறுகதை

ரேச்சல்

# வழியை சுத்தம் செய்!



மோசஸ் என்ற பெரியவர் ஒருவர் எப்போது பார்த்தாலும் தன்னுடைய வீட்டுவாசலில் அமர்ந்தபடி பைபிள் படித்துக் கொண்டே இருப்பார். இதனை அநேக நாட்கள் கவனித்தான் சங்கர் என்ற இளைஞன். ஒருநாள் அவரிடம் "தாத்தா! எப்போ பார்த்தாலும் இந்த புத்தகத்தையே படிச்சிட்டு இருக்கீங்களே? இதை எத்தனை நாளா படிக்கிறீங்க?" என்று கேட்டான். அதற்கு அவர் "55 வருடமா படிக்கிறேன்" என்றார். அப்படின்ன உங்களுக்கு மனப்பாடம் ஆகியிருக்குமே! ஏன் இன்னும் படிக்கிறீங்கள்? என்றான். தாத்தா சிரித்தபடி, "எனக்கு ஒரு உதவி செய், நீ செய்து முடித்த பின்பு நான் பதில் சொல்கிறேன்" என்றார். "என்ன உதவி தாத்தா?" பெரியவர் ஒன்றும் பேசாமல் பக்கத்தில் இருந்த ஒரு மூங்கில் கூடையை எடுத்தார். அதில் அடுப்புக்கரி இருந்தது. அதை ஒரு மூலையில் கொட்டினார். பல நாட்களாக அடுப்புக் கரியை சுமந்து சுமந்து அந்த கூடையின் உட்புறம் கறுப்பாக மாறி இருந்தது. பெரியவர், "தம்பி, இந்த கூடையில் கொஞ்சம் தண்ணீர் பிடித்து வா" என்று சொன்னார். சங்கருக்கு சிரிப்பு வந்தது. இருந்தாலும் பெரியவர் சொல்லி விட்டதால் எடுத்து சென்று தண்ணீர் நிரப்பினான். அவன் வந்து சேருவதற்கு முன்பே எல்லா தண்ணீரும் ஒழுகிப்போனது. பெரியவர் பலமுறை இப்படி சங்கரை அலையவிட்டார். கடைசியாக ஒரே ஒருமுறை மட்டும் அவர் சொல்கிறபடி செய்துவிட்டு ஓடிவிடுவோம் என மனதில் நினைத்துக் கொண்டு கடைசியாக தண்ணீர் பிடித்தான். வழக்கம்போல் தண்ணீர் ஒழுகி போய்விட்டது. தாத்தாவிடம் சென்று "தாத்தா இந்த கூடையில் தண்ணீர் நிற்காது என்று உங்களுக்கு தெரியுமா? தெரியாதா?" என்று கோபமுடன் கேட்டான் சங்கர்.



அதற்கு அவர் புன்னகையோடு "இதில் தண்ணீர் நிற்காது என்று எனக்குத் தெரியும். நீ முதல்முறை தண்ணீர் பிடிக்க போகும்போது இந்த கூடை எப்படி இருந்தது?" என்றார். அதற்கு அவன் மிகவும் கறுப்பாக இருந்தது என்று சொன்னான். இப்போது பார் மீண்டும் மீண்டும் தண்ணீர் பிடித்ததினால் கூடையின் உட்புறம் சுத்தமாகிவிட்டது என்று பதில் சொன்னார் பெரியவர். நீ கேட்ட கேள்விக்கு பதில் இதுதான். எத்தனை முறை படித்தாலும் வேத வசனம் மனப்பாடம் ஆகிவிடும் என்று சொல்ல முடியாது. ஆனால் படிக்கிற ஒவ்வொரு முறையும் உள்ளத்திற்குள் இருக்கும் அழுக்கும், கறையும் சுத்தமாகிக் கொண்டே இருக்கும் என்றான். சங்கருக்குள்ளே என்னென்னவோ செய்தது. "தாத்தா, எனக்குள்ளேயும் நிறைய அழுக்கு இருக்கிறது. எனக்கு பைபிள் கிடைக்குமா? என்றான். நிச்சயமாய் தருகிறேன் என்று தாத்தா வீட்டில் இருந்த ஒரு பைபிளை எடுத்துக் கொடுத்தார்.



இளைஞர்களே! "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்கிறதினாலேதானே (சங்கீதம் 119:9)ன்படி நாமும் தினமும் வேதம் வாசித்து, நம் வாழ்வை தூய்மையாக காத்துக் கொள்வோம்! ●

Refresh | Revive | Recharge

# SYNERGIA

## MONTHLY YOUTH FELLOWSHIP

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

SINGING | WORSHIP | SHARING | MESSAGE

PRAYER | ACTIVITIES | FELLOWSHIP | TESTIMONIES

*Together we grow in the likeness of Christ!*

நான் 2015ஆம் ஆண்டு தூத்துக்குடியில் சினெர்ஜியா கூடுகை நடக்கிறது என்று கேள்விப்பட்டு ஒவ்வொரு மாதமும் கலந்துகொள்ள ஆரம்பித்தேன். நான் சினெர்ஜியா வருவதற்கு முன்பு ஒருவிதமான பயத்தோடு இருந்தேன் . ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்படும் ஆலோசனை என் வாழ்வில் படிப்படியான மாற்றத்தை உண்டு பண்ணினது. ஆண்டவருக்காக ஏதாகிலும் செய்ய வேண்டுமென்ற விருப்பம் எனக்குள் வந்தது. நான் 11ஆம் வகுப்பு படிக்கும்போது என் பள்ளியில் யோகா கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் அப்போது சினெர்ஜியாவில் கொடுக்கப்பட்ட ஆலோசனையின் மூலமாக அதை வென்று வருவதற்கு தேவன் கிருபை செய்தார். என்னுடைய ஜெப வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. என்னுடைய தாலந்துகளை வெளிப்படுத்த சினெர்ஜியா கூடுகை மிகுந்த உதவியாக இருந்தது. என்னுடைய படிப்பிலும் தேவன் என்னை உயர்த்தி வைத்துள்ளார்.



- குளோரி கிப்டி, தூத்துக்குடி.

**நீங்களும் உங்கள் நண்பர்களோடு பங்குபெறுங்கள்!**

**1st SUNDAY** (3rd Feb.)

**VELLORE (3 PM):**
Immanuvel Complex, Viruthampet,
Near Ambedkar Statue, Vellore. 9442885315

**JEBAMALAI (2 PM)** Kadaiyam (via), Keelamathapuram,
Tirunelveli Dist. 9486471946 | 9750955548

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Jesus Redeems Branch Office, No:62 2nd Floor, Benny Kumar Main Road, Tirupur -01. 9750955549

**KULAMANICKAM (3 PM - 5:30 PM)**
Jesus the Way AG Church, Adaikkalapuram,
Kulamanickam, Ariyalur Dt. 9442855315

**BANGALORE (4PM - 6PM)**
Steve's Gym, HBR. Layout 3rd Block,
(Near Jesus Calls). 9791444788

**SIVAKASI (3PM - 5:30 PM)**
Jesus Redeems Gethsemane Prayer House,
HOREB Complex, 1st Floor, No 1292B PKN Road
(Rathna Vilas Stop). 9750955548/ 9442906567/
9442842315.

**DINDIGUL (3PM - 5:30 PM)**
Jesus Redeems Gethsemane Prayer Center,
No.37H/69, Scheme Road, Nagal Nagar. 7598155502

**TIRUPATI (3PM) :** Old Community Hall,
West Church. 9985033401 | 9442885315

## 2nd SUNDAY (10th Feb.)

**MARTHANDAM (4.30 PM),**
H.M.S.Century Hall,
Behind C.S.I. Church,
(opp. P.P.K. Hospital) 9865189883

**THANJAVUR (3:00PM)**
Jesus Redeems Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9442855315

**SATHANKULAM (3.00 PM)**
Henrie Matriculation School,
Ph: 04639-220022
9750955548 | 9442842315

**MUMBAI** (5PM - 7PM)
Bright High School, Village Road, Bhandup(W), Mumbai - 400078 (Near Nahur Rly. station),
09004882470 | 09664050567

**PAVOORCHATRAM (2:30 PM)**
KTC Nagar CSI Christ Church
9750955548, 9994436722,
9842166406

**POLLACHI (3:30 PM - 6 PM)**
Balamurugan A/C Mahal,
Coimbatore Road,
Near Amuthasurabi Hotel. 9750955549

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station, 9597927799 / 9442885315

**KOVILPATTI (3PM - 5.30PM)**
St. Paul's Matriculation School,
Kovilpatti
9750955548 | 9787322334

**USILAMPATTI (3:00PM)**
Arputha Jeba Maiyam,
Opp TELC School 7598155502.

**VILLUPURAM (3 - 6PM)**
SAP Mahal 1st Floor, Opp. Petrol Bunk, Old Bus Stand
8344411022 | 9442885315

## 3rd SUNDAY (17th Feb.)

**TIRUNELVELI (3:30 PM)**
The Deaf & Dumb School,
(opp- Central Jail) Palayamkottai.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM )**
Jesus Redeems Branch Office
Gethsamane Prayer Center,
No:90,1st Floor Arts College Road,
Near Charan Tower, Coimbatore
0422 - 2309040 | 9750955549

**CHENNAI** (3.30PM)
VGP Victory House,
Mount Road. 9442 885315

**TRICHY (3PM)**
22A, 1st Floor, Thennur High Road, Near KMC Bus Stop, Thennur,
Trichy - 620017. 9442855315

**NALUMAVADI (2.30PM)**
Tabernacle of God,
Nalumavadi, Thoothukudi Dt
9750955548 | 04639 - 220022

**NAGERCOIL (4 PM)**
Jehova Salvation Church,
369C, Derik Junction.
9865189883 | 7598155503

**CUDDALORE (3PM - 6PM)**
Jesus Redeems Branch Office,
Chellakuppam (Old Town)
9965144000 | 9442885315

**MUMBAI (5PM - 8PM)**
Methodist Church, Worlipada,
Anand Nagar, Marol
Andheri. 9004882470

**MADURAI (4:30 - 6:30PM)**
Thomas Tution Centre Hall
Opp. to Reliance Petrol Bulk,
Pasumalai. 7598155502

## 4th SUNDAY (24th Feb.)

**TUTICORIN (3PM - 5.30PM)**
**Suganthi Nursing Home Prayer Hall, Near Jesus Redeems Branch Office, 77 V.E Road, Opp to Holy Convent**
9750955548| 8344116000| 9442842315

**PONDICHERRY (3PM - 6PM)**
Hallelujah A.G. Church,
Thennan Salai Road,
8344433800 | 9787339422

**THIRUVALLUR (2.30PM - 5 PM)**
Jesus Redeems Branch Office
HSR Tower (Near Gowdi Church)
Theradi, Thiruvallur. 9442885315

**MUMBAI (5PM - 7.30PM)**
Koli Jamat Hall, Behind Sholay Hotel, Near Rajabhalli Chawl,
Dharavi Main Road. 09004882470

**ERODE (4 PM - 6:30 PM)**
Jesus Redeems Branch Office, No:216, KR Bakery, Ist Floor Near Fire Service, Gandhiji Road. 9750955549

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548 | 9442842315

**OOTY (2PM - 5PM)**
YWCA Chapel, Anandagiri.
9750955549

**TIRUVANNAMALAI (4PM- 6PM)**
Leebanon Bungalow, Vettavalam Road, Bypass Road Corner
9865553420 | 9789004627

**THENI (2.30PM - 5 PM):**
Jesus Redeems Branch Office,
No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor,
9994960967 | 9976766422

**PERNAMBUT (3 PM - 6 PM):**
Revival Prayer Tower,
V. Kotta Road, Pernambut,
Vellore Dist. 99408 54125

**இயேசு விடுவிக்கிறார்**

வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி




**சத்தியம்**
**சனிக்கிழமை**
(10:30 PM)

**வாலிபர்களே!**
உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! இந் நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத் துங்கள்! 9750955547

# ஜெபக் கையேடு - பிப்ரவரி 2019

ஜெபம் வெளீட்டா



## எழுப்புதல்

- இந்தியாவில் இருக்கும் எல்லா திருச்சபைகளிலும் எழுப்புதல் அக்கினி போடப்படவும், தேவனுடைய மகிமை சபைகளில் வெளிப்படவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- கள்ள உபதேசங்கள் மடங்கடிக்கப்படவும், பொய்யான எழுப்புதலைக் கொண்டு வந்து ஏமாற்றுகிற காரியங்கள் சபைகளிலிருந்து மடங்கடிக்கப்பட ஜெபிப்போம்.
- எழுப்புதலுக்கு விரோதமாக எழும்புகிற சாத்தானின் கிரியைகள் முறிக்கப்படவும் அவைகள் கட்டப்படவும் மன்றாடி ஜெபிப்போம்.
- பொய்யான எழுப்புதலைக் கொண்டு வரவும், ஏமாற்றுகிற ஊழியங்களை எழுப்பவும், பொய்யான ஊழியர்கள் எழும்பி மக்களை வஞ்சிக்கவும் கிரியை செய்யும் சாத்தானின் கிரியைகள் அழிக்கப்பட மன்றாடி ஜெபிப்போம்.
- எழுப்புதலின் அக்கினி வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகள் மீது ஊற்றப்படவும், வாலிபர்களும், சிறுபிள்ளைகளும் சேனையாக எழும்பவும் ஜெபிப்போம்.
- மரித்தோரை உயிரோடு எழுப்பதக்கதான அற்புதங்கள் இனிவரும் நாட்களில் வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகளைக் கொண்டு நடைபெற ஜெபிப்போம்.
- ஆதி அப்போஸ்தலர்கள் நாட்களில் நடைபெற்ற அற்புத அடையாளங்கள், இந்த வருடத்தில் வாலிபர்கள் மற்றும் சிறுபிள்ளைகளைக் கொண்டு செய்யும்படி போராடி ஜெபிப்போம்.



## இந்தியா

- இந்திய தேசத்தில் ஆவிக்குரிய மாற்றம் வரவும், ஜனங்களுடைய மனக்கண்கள் திறக்கப்படவும், தேவபயம் உள்ளவர்களாக, நீதிநேர்மையுடன் நடக்கவும் ஜெபிப்போம்.
- ஏழை மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படவும், கடந்த வருடத்தில் துக்கப்பட்டு கண்ணீர் வடித்த மக்களின் காரியம் இந்த வருடத்தில் மாறுதலாய் முடியும்படி ஜெபிப்போம்.
- பொருளாதார பாதிப்புகள் மாறி, ஜனங்கள் மகிழ்ந்திருக்கும்படியான ஆசீர்வாத மாற்றம் உண்டாகவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- தேசத்தில் கொள்ளை நோயினால் பாதிக்கப்படாமல் மக்கள் பாதுகாக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.
- இயற்கையினால் பேரழிவுகள் வராமல் தடுக்கப்பட திறப்பிலே நின்று மன்றாடி ஜெபிப்போம்.
- இந்திய தேசத்தின் இராணுவத்தின் மறைவிடங்களில் தவறான காரியங்கள் நடைபெறாமல் தகர்க்கப்படவும், குழப்பங்கள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- தேசத்தை அந்நிய தேசத்துக்கு காட்டிக் கொடுக்கும் அதிகாரிகள் எழும்பாதபடிக்கு. இராணுவ வீரர்களும், அதிகாரிகளும் உண்மையாகவும், நீதி நேர்மையுடனும் செயல்பட ஜெபிப்போம்.

**தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக் குறிப்புக்காக முழுமனதோடு ஜெபியுங்கள்.**

**உங்கள் ஜெபக்குழுவில் நீங்கள் ஜெபித்து, பதில் கிடைத்த சாட்சிகள் இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். தினமும் ஒரு நிமிடம் தேசத்திற்காய் திறப்பிலே நிற்போம்...**

## தேசம்

(இலங்கை, மலேசியா, இஸ்ரவேல்)



- இஸ்ரவேல் தேசத்தின் யூத மக்களின் இரட்சிப்பிற்காகவும், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், அவர்கள் மனக்கண்கள் திறக்கப்படவும் ஜெபிப்போம்.
- இஸ்ரவேல் தேசத்தில் சமாதானமும், பாதுகாப்பும், எழுப்புதலும் உண்டாகவும், எழுப்புதல் அக்கினி அந்த தேசத்தில் பற்றி எரியவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- மலேசியாவில் வசிக்கும் தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவும், அவர்களுக்கு விரோதமாக எழும்பும் தந்திரமான கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.
- தமிழ் மக்களுக்கு எந்தவிதமான சேதங்களும் உண்டாகாமல் பாதுகாப்பாய் இருக்கவும், தமிழ் மக்கள் சிதறடிக்கப்படாமல் சமாதானமாய் வாழவும் ஜெபிப்போம்.
- இலங்கை தேசத்திற்கு விரோதமாக எழும்புகிற அந்நிய சக்திகள் அழிக்கப்படவும், தமிழ் மக்கள் பாதுகாக்கப்படவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இலங்கை தேசத்தில் வாழும் தமிழ் மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாமல் சமாதானமாகவும், ஆசீர்வாதமாகவும் காணப்படவும், வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
- இலங்கையில் வசிக்கும் மலைவாழ் மக்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள் வாழ்க்கைதரம் உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.

## தேர்தல்



- இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.
- தேர்தலுக்காக உயிர்களைக் கொடுத்து இரத்தம் சிந்தி செய்யப்படும் மந்திரங்கள் அழிக்கப்பட்டு போகவும், ஜெப தூபம் இந்திய தேசத்தில் ஏறெடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- தமிழ்நாட்டின் இயற்கை வளத்தை சுரண்டி அரசியல் செய்யும் தலைவர்களின் அதிகாரங்கள் தடை செய்யப்பட ஜெபிப்போம்
- நீதிமன்றங்கள், தேர்தல் கமிஷன் ஆகியன எந்த ஒரு அரசியல் தலைவர்களின் கட்டுப்பாட்டிலும் இயங்காமல், கட்சி பாகுபாடின்றி நடுநிலையோடு செயல்பட ஜெபிப்போம்.
- இந்தியாவில் இருக்கும் சுமார் 90 கோடி வாக்காளர்கள் அனைவரும், கடமை உணர்வோடு சரியான நேரத்தில் வாக்களிக்கவும், கள்ள ஓட்டுகள் போட முயற்சிக்கிற காரியங்கள் முற்றிலும் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- தலைமைத் தேர்தல் ஆணையரும், அவரது குழுவினரும் பாரபட்சமற்ற முறையில் விதிகளை நடைமுறைப்படுத்துவதில் கண்டிப்புடன் நடந்துகொள்வதற்கு வேண்டிய மன தைரியத்தை தேவன் அவர்களுக்கு கட்டளையிட ஜெபிப்போம்.
- பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்துடன் அரசியலுக்கு வராமல், நம் மாநிலம், நம் தேசம் ஷேமத்துடன் இருக்க நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிற இளம் தலைமுறையினர் எழும்ப ஜெபிப்போம்.

லீனா அவினஷ்

# மறுரூபமாக்கக் கூடிய ஆற்றல் பெற்ற தேவனுடைய வார்த்தை



பிரியமான வாலிபர்களே! ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையை வாசித்து தியானித்து உங்கள் சிந்தையில், நடத்தையில் புதிதாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். அதுமட்டுமல்ல நீங்கள் இப்படி வேதத்தை தியானிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் உங்களை தமது சாயலாக மாற்றி மகிமையின் மேல் மகிமைக்கு உங்களை கொண்டு செல்வார் என்பதையும் மறவாதீர்கள்.

நண்பர்களே, நீங்கள் ஒருவேளை, “இப்பொழுது இருக்கும் இடத்தில் இருந்து நான் எங்கு செல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்” என்று தேவனிடம் பல நாட்களாக கேட்டுக் கொண்டிருக்ககலாம்.

தேவனுடைய வார்த்தையை உங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அந்த வார்த்தை உங்கள் கேள்விகளுக்கான பதிலை கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், மீதமான எல்லாவற்றையும் அது பார்த்துக் கொள்ளும்.

தேவனுடைய வார்த்தையை வாசிப்பது என்பது நிலத்தில் விதையை விதைப்பதைப் போன்றது உங்கள் இருதயத்தில் விதையாகிய அவருடைய வசனத்தை நீங்கள் விதைத்தால் போதும், அது வளர்ந்து நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வரும்.

மாற்கு 4:26-29 வசனங்களில் இயேசு, நிலத்தில் விதையை விதைத்து காத்துக் கொண்டிருக்கும் விவசாயியைப் பற்றிசொன்ன உவமையைப் பார்க்கலாம்.

**முதலாவதாக,** இந்த உவமையில் நிலத்தில் விதையை ஒரு நேரத்தில் விதைப்பார்கள். அநேக நாட்கள் கழித்து அதின் பலனை அறுவடை செய்வார்கள். தேவனுடைய வார்த்தையும் இப்படி தான் செயல்படுகிறது என்பதை இயேசு விளக்குகிறார். விதையானது நிலத்தில் முழுமையாக புதைக்கப்படாமல் இருந்தால் அதினால் கனிகொடுக்க முடியாது. அதேபோல் தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்து காக்காவிட்டால் அதின் பலனை நம்மால் அனுபவிக்க முடியாது. வேதத்தை நம் கரங்களில், செல்போனில், வீட்டில் வைத்திருப்பதினால் உங்களால் மாற்றத்தை அனுபவிக்க முடியாது.

**இரண்டாவதாக,** இந்த நிலத்தில் விதையை விதைத்த விவசாயி, விதையை விதைத்து, இரவில் தூங்கி, ஒவ்வொரு நாளும் விழித்து அது





முளைத்ததா என்று பார்ப்பார். விதையானது முளைக்க நேரமாகும். விதையை விதைத்த மறுநாளே அது பலனை கொடுக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. வெளியே எந்த அடையாளமும் தெரியவில்லை என்பதால் அந்த விதை முளைக்காது என்று சொல்ல முடியாது. விதையை விதைத்து விசுவாசத்தோடு காத்திருக்க வேண்டும். அதின் நேரத்தின், அதற்கான காலத்தில் அது நிச்சயமாக முளைத்து பலனைக் கொடுக்கும்.

இதேபோல் தான் தேவனுடைய வார்த்தையும் செயல்படுகிறது. இன்றைக்கு நான் வேதத்தை தியானிக்கிறேன். நாளைக்கு அதின் கனியைப் பார்க்கப் போகிறேன். நாளைக்கே என்னுடைய வாழ்க்கையில், சிந்தையில், நடத்தையில் மாற்றம் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்க முடியாது. ஒருநாள் வேதத்தில் தியானித்தபடி வாழ்ந்துவிட்டு அடுத்த 6 நாட்கள் நம் இஷ்டப்படி வாழக் கூடாது. இது விதைத்த விதையை ஒவ்வொரு நாளும் தோண்டி எடுப்பதைப் போன்ற செயலாகும்.

இந்த உவமையில் வசனம் 27ல் அவனுக்கு தெரியாதவிதமாய் விதை முளைத்து பயிராகும் என்று இயேசு ஒரு முக்கிய மான சத்தியத்தை சொல்லுகிறார். அதாவது அது எப்படி முளைக்கும் என்பது விதைத்தவனுக்கு தெரியாது. ஆனால் நிச்சயமாக முளைக்கும்.

அதேபோல் இருதயத்தில் விதைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையும் எப்படி செயல்படும் என்று எனக்கு தெரியாது. அதுமட்டுமல்லாமல் வேதத்தை வாசிப்பதற்கும் மற்ற காரியங்களை வாசிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆனால் எனக்கு தெரியும், தேவனுடைய வார்த்தை வல்லமையானது. அது வாழ்க்கையை மாற்றக் கூடியது. ஏனென்றால் அந்த மாற்றத்தை நான் அனுபவித்திருக்கிறேன். அந்த அசாதாரணமான மாற் றத்தை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

தேவனுடைய வார்த்தைக்குள் அவருடைய ஜீவன் இருக்கிறது. நம் இருதயத்தில் இந்த வார்த்தையை விதைத்து அதை காத்துக் கொள்ளும்போது இந்த ஜீவன் கிரியை செய்ய துவங்குகிறது. நாம் நேரமெடுத்து இந்த விதையாகிய வார்த்தையை நம் இருதயத்திற்குள் விதைத்தால் போதும். மற்ற எல்லாவற்றையும் இந்த விதை பார்த்துக் கொள்ளும். தெய்வீக மாற்றத்தை நீங்கள் அனுபவிக்கத் துவங்குவீர்கள்.

பிரியமானவர்களே நாம் இந்த எளிமையான சத்தியத்தை மறந்துவிட்டோம். தேவன் என்னிடம் பேச வேண்டும், என் வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவருடைய வார்த்தையை வாசித்து, அது முளைக்கும் வரை காத்திருக்க முடியாமல் உடனே பலனை எதிர்பார்க்கிறோம்.

சிலர், பல மணி நேரம் எடுத்து அற்புதத்திற்காக ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த வார்த்தையை தியானித்தால் அதுவே அற்புதத்தை கொண்டு வரும். ஜெபம் என்பது விதைக் கான உரம் மற்றும் தண்ணீர் போன்றது. விதையை விதைத்து விட்டு தண்ணீர் ஊற்றினால் தானே அதனால் பலனை கொடுக்க முடியும்.

ஜெபம் ஒருபோதும் வேதம் வாசிப்பதற்கு மாற்றாக செயல்பட முடியாது. இரண்டும் தனித்தனியே செயல்படக் கூடியது.

இயற்கையான உலகில், விதையை விதைக்காமல் அறுவடை செய்ய முடியாது என்பதை தெரிந்த நமக்கு ஆவிக்குரிய உலகில் மாத்திரம், விதையை விதைக்காமல் (வேதம்

**விதையானது நிலத்தில் முழுமையாக புதைக்கப்படாமல் இருந்தால் அதினால் கனிகொடுக்க முடியாது. அதேபோல் தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்து காக்காவிட்டால் அதின் பலனை நம்மால் அனுபவிக்க முடியாது**

வாசிக்காமல்) தண்ணீர் மாத்திரம் ஊற்றினால் (ஜெபித்துக் கொண்டே இருந்தால்) பதில் கிடைக்காது என்று ஏன் தெரியாமல் போனது?

எல்லா நேரமும், உங்கள் பதில்களுக்கு வேறு ஒருவரிடம் ஜெபிக்கும்படி நாடி செல்லாதீர்கள். நீங்கள் விதையை உங்கள் இருதயத்தில் விதையுங்கள். அதின் காலத்தில் அறுவடையை பார்ப்பீர்கள்.

இறுதியாக, ஒரு விவசாயிக்கு எப்போது அந்த விதை முளைக்கும் என்பது தெரியாது. அவர் விதைத்து விட்டு, அது வளர என்னவெல்லாம் தேவைப்படும் என்பதை அறிந்து தினமும் தண்ணீர் ஊற்றி, உரம் போட்டு, அந்த விதையை முளைக்க வைக்க முயற்சி எடுப்பார். ஆனால் அந்த விதையை முளைப்பிப்பவர் நம் தேவன். அவரே சிருஷ்டி கர்த்தர், அவரால் அதனை முளைக்க வைக்க முடியும்.



**நீங்களும் வேதமாகிய விதையை உங்கள் இருதயத்தில் விதையுங்கள். ஜெபமாகிய தண்ணீரை ஊற்றுங்கள். அதின் பலனை அனுபவிப்பீர்கள். உங்கள் சிந்தை நாளுக்கு நாள் புதிதாகிக் கொண்டே இருக்கும்!** ●

# எழும்பிடு இளைஞனே!



எப்படி வந்தது இந்த தைரியம்?
தாயே மகனை கொன்ற அவலம்!
தந்தையே மகளை தவறாய் பயன்படுத்திய கேவலம்!
அறியா வயதிலேயே கற்பை இழந்து நிற்கும் சிறுமிகள்!
அவர்களின் கற்பை சூறையாடிய கொடூரங்கள்!
வயிற்று பிழைப்பிற்கே வழி இல்லாத மக்கள்!
அரசின் வருமானத்தை நாள்தோறும்
உயர்த்தும் ‘குடி’ மகன்கள்!
இருப்பதற்கு இடம் இன்றி தவிக்கும் ஈழம்!
கல்வி அறிவு பெற முடியாத குழந்தைகள்!
அதனை வியாபாரம் ஆக்கும் கயவர்கள்!
விலைவாசி உயர்வு ஒருபுறம்,
விலைகொடுத்தேனும் வாங்கமுடியாத
உயிர்கள் மாண்டுகொண்டிருக்கிறது மறுபுறம்!
வறுமை வயிற்றுப் பசியை போக்கவில்லை!
தெருவெங்கும் டாஸ்மாக் கடைகள்!
விழித்திடு இளைஞனே இனியும்!
உறங்கிக் கொண்டிருப்பாய் எனில்,
பாவம் பெருகி பட்டணத்தையே அழித்துவிடும்!
இந்த சுமைகளை கண்ணீரில்
கரையவிட்டு திறப்பிலே நிற்க வேண்டிய நீ
மாறாக பாரசுமைகளை இமைமேல் வைத்து இன்னும்
இறுக கண்களை மூடி தூங்குவாயானால்
பாரதம் பாழாய்ப் போகும்..
எழும்பிடு இளைஞனே! விடியல் வரும் வரை
காத்திருக்க இது நேரம் அல்ல,
உன் இமை திறப்பு இமயத்தையும்
அசைத்துவிடும் என்பதை மறவாதே!!!

– கிறிஸ்டி ஷோபா

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 & Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/81-A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# Achievers









## தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை

ஜனவரி 6ஆம் தேதி திருச்சியில் வைத்து தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சுமார் 5000 மாணவர்கள் கலந்துகொண்டார்கள். அநேகர் தேர்வை குறித்த பயத்தோடும், நம்பிக்கை இல்லாதவர்களுமாக கலந்து கொண்டார்கள். தேர்வு பயம் நீங்கி தன்னம்பிக்கையோடு கடந்து சென்றுள்ளனர்.





நான் இனிமேல் தேர்வுக்காக கடினமாக படித்து எழுதுவேன், பெற்றோருக்கு கீழ்ப்படிவேன், ஆண்டவரை தேடுவேன்
- ராஜா, புதுக்கோட்டை







இயேசுவின் மேல் 100% நம்பிக்கை வந்தது, நான் சாதிப்பேன்.
- வர்ஷினி, திருச்சி



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2017-2019.
Date of Publication: 25-01-2019.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2017-2019.

# நாகர்கோயிலில்... மாணவர் ஆசீர்வாத கூடுகை

## மார்ச் 10

ஞாயிற்றுக் கிழமை (4:30 - 8:30 pm)

**ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி மைதானம்,**
பார்வதிபுரம், நாகர்கோயில்

செய்தியும் ஜெபமும்
**சகோ. மோகன் சி. லாசரஸ்**
98651 89883 | 75981 55503



இயேசு விடுவிக்கிறார் ஊழியம் நடத்தும்

# சேனை 2019

வாலிபர் தலைமைத்துவ பயிற்சி முகாம்

## ஆகஸ்ட் 16–18

இடம் : **தேவனுடைய கூடாரம் நாலுமாவடி**

வயது வரம்பு : 17-35
முன்பதிவு செய்யுங்கள்!

குறிப்பு: இரட்சிப்பின் அனுபவம் இருக்க வேண்டும், ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும்!



பயிற்றுவிப்போர்







**சகோ. மோகன் சி. லாசரஸ் | சகோ. அப்பாத்துரை | சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு 94428 85315 / 97509 55548 / 97509 55549 (Online Registration: 9840397736)